விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

SATS-TECH ENGINEERS

NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 28 சனிக்கிழமை (13.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 359

# இலங்கைக்கான இராணுவ உதவிகளை மட்டுப்படுத்த அமெரிக்கா தீர்மானம்

## மனித உரிமை கண்காணிப்பகம் அறிக்கை

(வாஷிங்டன்)

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளுக்கு வழங்கப்படும் இராணுவ உதவிகளை மட்டுப்படுத்த அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அமெரிக்க காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய சட்டமூலத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் பொறிவெடி விதைப்பு 500 படையினர் கால்களை இழப்பு

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் ஒவ்வொரு அங்குல நிலமும் பொறி வெடிகளினால் சூழப்பட்டுள்ளது. மிதி வெடிகளில் சிக்கி 500 படையினர் கால்களை இழந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளில் 2ஆயிரத்து500 பேரே எஞ்சியுள்ளனர். எனினும் புலிகள்வசம் அனுபவமுள்ள படையணிகள் உள்ளன. இதனால் தான் படைத்தரப்பு இழப்புக்களை சந்தித்து வருகின்றது என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பிலிருந்து வெளிவரும் பிஸ்னஸ் ருடே நாளிதழுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

போர் நிறுத்தம் (12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் மீதான தாக்குதலுக்கு சர்வதேச நாடுகள் உதவி அளிக்கின்றன

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் தமிழ் மக்கள் மீதான தாக்குதலுக்கு அனைத்துலக நாடுகள் உதவி புரிந்து வருகின்றன என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சுவிசிலிருந்து மாதம் இருமுறை வெளிவரும் நிலவரம் (12.12.08) வார இதழுக்கு பா.நடேசன் வழங்கிய நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிளிநொச்சி மீதா முற்றுகை இறுக்கப்பட்டுள்ளது. எப்படியாவது கிளிநொச்சியைக் கைப்பற்றியே ஆவதெனச் சிங்களம் சூளுரைத்துள்ள நிலையில், என்ன விலை கொடுத்தாவது கிளிநொச்சியைக் காப்பாற்றியே தீர்வதென விடுதலைப் புலிகள் தரப்பில் (02ஆம் பக்கம் பார்க்க)



# 2 நாட்கள் மோதலில் 120 இராணுவத்தினர் பலி

## புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கடந்த இரு தினங்களாக கிளிநொச்சி நோக்கி இரு முனைகளில் முன்னேறிய படையினரில் பெருமளவிலான முன் நகர்வை விடுதலைப் புலிகள் முறியடித்து படையினருக்குப் பெரும் இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர் என விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சிக்கு மேற்குப் புறமான புதுமுறிப்பை நோக்கியும் தெற்குப் புறமான அறிவியல் நகரை நோக்கியும் முன் நகர்வை மேற்கொண்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## முகர்ஜியின் விஜயம் அறிவிக்கப்படவில்லையாம்

(கொழும்பு)

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் இலங்கை விஜயம் தொடர்பில் இதுவரையில் எவ்வித அறிவித்தல்களும் கிடைக்கப்பெறவில்லை என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு விஜயம் செய்வதாக தமிழக (12ஆம் பக்கம் பார்க்க)

# சிவாஜிலிங்கம் எம்.பியை வெளியேற்ற இந்திய அரசாங்கம் உத்தரவு!

(சென்னை)

இலங்கையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தை நாட்டில் இருந்து 72 மணித்தியாலங்களுக்குள் வெளியேறுமாறு இந்திய மத்திய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. அல்லது வெளியேற்றப்படுவார் என்றும் மத்திய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக ட்ரான்ஸ்கரண்ட் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இந்திய மண்ணில் வைத்து இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிடுவதை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய (12ஆம் பக்கம் பார்க்க)

இது ஒரு விளம்பரம்

உங்கள் வங்கி உலகில் முன்னிலையில் உள்ள வங்கியா?

முதலீடு செய்வதற்குத் தீர்மானிக்கும்போது, நிதி நிறுவனத்தின் ஸ்திரத்தன்மை, நம்பிக்கை என்பவற்றில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்தும் முகமாக பணவைப்பாளர்களுக்கு மிகவுயர்ந்த பாதுகாப்பை வழங்குவதில் முன்னணி நிலையை நிரூபித்துள்ள இலங்கையின் வங்கியான...

(தயவுசெய்து 6ம் பக்கத்தைப் பார்க்கவும்)

நீர்ச்சிரங்கு, தோல் வியாதிகள் ஏற்பட்டால்...

- வெள்ள நீர் மற்றும் சேற்றுப் பிரதேசங்களில் பாதணிகளின்றிச் செல்லும் போது நீர்ச்சிரங்கு மற்றும் அரிப்பை ஏற்படுத்தக் கூடிய தோல் வியாதிகள் ஏற்படலாம்.
- வெள்ள நீர் தேங்கியுள்ள, சேற்றுப் பிரதேசங்களால் வந்தவுடன் பாதங்களை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவிக் கொள்ள வேண்டும்.
- இவ்வாறான இடங்களுக்கு பாதணிகளின்றிச் செல்ல வேண்டாம்.
- வெளியே செல்லும்போது பிள்ளைகள் எப்போதும் பாதணிகளை அணிந்து கொள்வதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- நீர்ச்சிரங்கிற்கு உட்பட்டவர்கள் ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் கொண்டிஸ் பளிங்குகளை நீரில் இட்டு குங்குமப்பூ நிறம் வரும்வரை கரைத்து அதனால் தமது கால் பாதங்களை நன்றாக தேய்த்துக் கழுவ வேண்டும்.
  இதற்குப் பதிலாக ஜென்சியன் ஊதா திரவத்தையும் பாதிப்புற்ற இடங்களிற்கு பூச முடியும்.
- நீர்ச்சிரங்கு மற்றும் ஏனைய தோல் நோய்களின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டால் தகுந்த வைத்திய ஆலோசனையுடன் உரிய சிகிச்சையினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை CARE International

(C-1814)

# ஓமந்தையூடாக 95 சடலங்கள் நவம்பர் மாதத்தில் பரிமாற்றம்

கடந்த நவம்பர் மாதத்தில் மாத்திரம் ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாக 95 சடலங்களைப் பரிமாறியிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கப் படைகளுக்குமிடையில் வன்னியில் தொடர்ந்தும் நடந்து வரும் மோதல்களில் இரு பக்கத்திலும் கொல்லப்பட்ட 95 பேருடைய சடலங்களை நவம்பர் மாதம் பரிமாறியிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

நவம்பர் மாதத்தில் ஓமந்தைச் சோதனைச் சாவடியூடாக 3 ஆயிரத்து 900 பொதுமக்கள் பயணித்திருப்பதுடன் 445 நோயாளிகள் கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்டிருப்பதுடன் 730 வாகனங்கள் பயணித்திருப்பதாகவும் அவ் அமைப்புக் குறிப்பிட்டுள்ளது.

மோதல்களில் ஈடுபடும் இருதரப்பினருக்குமிடையில் சிக்குண்டுள்ள பொதுமக்கள் மருத்துவத் தேவைகள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவதற்குத் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன் இடம்பெயர்ந்தவர்களுக்கு மனித நேய உதவிகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு ஏதுவாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நாளாந்தம் கள நிலைமையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக் குழுவின் தலைவர் பௌல் கஸ்ரெலா கூறினார். (ச-5)

# வன்னி மக்களின் நிலைமை சோமாலியாவை விட மோசம்

## கவலையை அரசு நிராகரிப்பு

(கொழும்பு)

வன்னி மக்களின் நிலைமை சோமாலியாவை விட மோசமாகவுள்ளதென்ற உலக உணவுத் திட்ட அதிகாரியின் கூற்றை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் அக்கூற்றினை முற்றாக நிராகரிப்பதாகவும் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் இடம் பெற்ற வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தகவல் மற்றும் ஊடக அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிக்கியுள்ள அப்பாவித் தமிழ் மக்களின் நலன் கருதி அரசினால் பாரியளவில் நிவாரணப்பொருட்கள் தொடர்ந்தும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் சிக்கித் தவிக்குமாறு பொதுமக்களுக்கு நாம் உத்தரவிடவில்லை. அவர்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருமாறே தொடர்ந்தும் அழைப்பு விடுக்கின்றோம்.

விடுதலைப் புலிகளின் பிரதேசத்திலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தவர்களுக்கு சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்கின்றனர். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்குப் போதுமான அளவு உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் வன்னியிலுள்ள மக்கள் சோமாலியா மக்களைப் போல் உள்ளதாக ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இது எந்த வகையில் நியாயம்? வன்னி மக்களையோ அல்லது ஒட்டுமொத்த நாட்டையுமோ எவ்விதத்திலும் சோமாலியாவுடன் ஒப்பிட முடியாது. ஐ.நா. அதிகாரியின் இந்தக் கருத்தினை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம் என்றார். (ச-5)

# கிளாலி, முகமாலைப் பகுதிகள் சில தினங்களில் படை வசமாகும்

## யாழ்.இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் அடுத்து வரும் சில தினங்களில் விடுதலைப்புலிகளின் வசம் உள்ள முகமாலை மற்றும் கிளாலி முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை இராணுவத்தினர் கைப்பற்றி விடுவார்கள் என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண இராணுவ தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப்புலிகள் கடந்த 4 மாதங்களாக யாழ்.மாவட்டத்திலுள்ள பாதுகாப்பு வலயத்தின் மீது மேற்கொண்ட தாக்குதல் முயற்சிகள் அனைத்தும் படையினரால் முறியடிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, இந்த 4 மாத காலப் பகுதியில் இந்து ஆலயங்களில் விடுதலைப்புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களையும் வெடி பொருள்களையும் படையினர் கண்டெடுத்துள்ளனர்.

ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெற்ற காலங்களில் இந்த ஆயுதங்களை விடுதலைப் புலிகள் ஆலயங்களுக்குள் கொண்டு வந்துள்ளனர் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் சிறந்த முறையில் காணப்படுகின்றன. 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இவ் ஆண்டில் பாரிய சம்பவங்கள் எதுவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சில தினங்களுக்கு முன்னர் பெய்த அடை மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சேதமடைந்த வீதிகளை செப்பமிடும் பணிகளைப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும் இராணுவத்தினர் செய்து வருகின்றனர். யாழ்.குடாநாட்டைப் பூநகரியுடன் இணைக்கும் வீதியின் திருத்த வேலைகளும் தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்த வீதியில் 43 இடங்களை விடுதலைப் புலிகள் சேதமாக்கியிருந்தனர். வன்னியில் மோதல்கள் இடம்பெறும் பகுதிகளிலிருந்து குடாநாட்டுக்கு வருகின்ற மக்களுக்குரிய உதவிகளையும் படையினர் செய்கின்றனர்.

வன்னிப் பகுதியிலிருந்து இதுவரை 103 பொதுமக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர். யாழ்.குடாக் கடலேரியில் கடற்றொழில் செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த மீன் பிடித் தடைகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

இதனால் இப் பகுதி மீனவர்களின் வருமானமும் கணிசமான அளவு அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார். (ச-5)

# எறிகணைத் தாக்குதலில் பொதுமகன் படுகாயம்

(கிளிநொச்சி)

முள்ளியவளையை இலக்கு வைத்துப் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

முள்ளியவளை பொதுமக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் வே.சங்கர் (வயது-32) படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-5)

# 28 தமிழ் இளைஞர்கள் அம்பாறையில் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் பிரதேசத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் கடந்த சில நாள்களில் நடத்திய தேடுதலில் 28 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 2 பெண்கள் அடங்குவதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாகப் படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

அத்துடன் கடத்தப்படுவது, காணாமல் போவது போன்ற சம்பவங்களும் இடம்பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ச-5)

# தமிழ் மக்கள் மீதான தாக்குதலுக்கு...

தெரிவிக்கப்ப[illegible]ள்ளது. கள நிலைவரம் உண்மையில் எ[illegible]றாக இருக்கின்றது?

சிங்களப் படை[illegible]ளின் சிறப்பு டிவிசன்கள் இரண்டின் படையணிகள் கிளிநொச்சிக்கான சமரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதனால் கிளிநொச்சியின் மேற்கே பல முனைகளில் கடும் சண்டைகள் நாள்தோறும்நடக்கின்றன.

சிங்களப் படைகளின் முயற்சியை முறியடிக்கும் எதிர்ச்சமரில் புலி வீரர்கள் தீரத்துடன் போராடி வருகின்றனர். இதுவரை 2 காலக்கெடுக்களைச் சிங்களத் தளபதிகள் கிளிநொச்சியைப் பிடிப்பதற்கென்று விதித்தும் அது அவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கவில்லை.

கிளிநொச்சிக்கான சண்டைகளில் சிங்களப் படைகள் கடுமையான உயிரிழப்புக்களைச் சந்தித்து வருகின்றன. புதிய வியூகங்கள்- தந்திரோபாயங்களுடன் கிளிநொச்சியைப் பாதுகாக்கும் எதிர்ச் சமரில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

**வன்னியில் போர் தீவிரமடைந்துள்ள நிலைல்யில் ஏதிலிகளாக இடம்பெயர்ந்துள்ள மக்களின் துயரம்மிக மோசமாக ஆகியிருக்கின்றது. மக்களை வவுனியாவுக்கு வருமாறு அரசு கோரி வருவதுடன் அவர்கள் அங்கிருந்து வெளியேறுவதை விடுதலைப் புலிகள் தடுத்து வருவதாகவும் பிரசாரம் செய்து வருகின்றது. ஏதிலிகளாகவுள்ள மக்கள் வவுனியாவுக்கு வருகை தராமைக்குக்காரணம் என்ன?**

சிங்களப் படைகள் நிலங்களை ஆக்கிரமிக்கும்போது அங்கிருந்து மக்கள் இடம் பெயர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பாதுகாப்பு தேடுவதுதான் வழமை. இதுதான் இப்போதும் நடக்கின்றது.

தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு காட்டும் அக்கறை, ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுத கதைதான். இன அழிப்பிற்கும் சமூக சீரழிப்புக்கும் எமது மக்களை உட்படுத்திப் போராட்டத்தை அழிக்கும் நாசகார நோக்குடனேயே சிங்கள அரசு தனது பகுதிக்குள் வருமாறு மக்களை அழைக்கின்றது.

எத்தனை தடவைகள் இடம்பெயர்ந்தாலும் புலிகளின் கட்டுப்பாட்டு நிலத்தில் வாழவே மக்கள் விரும்புகின்றனர். சிங்கள அரசின் அழைப்பை மக்கள் தாமாகவே நிராகரிக்கின்றனர்.

**போர் தீவிரமடைந்துள்ள நிலையில் சமாதானப் பேச்சுக்கள் பற்றிய எதிர்பார்ப்புக்கள் எட்டாத தொலைவில் உள்ளன. அதேவேளை விடுதலைப்புலிகளைப் புறந்தள்ளி அரசியல் முனைப்புக்களில் ஈடுபட மேற்குல நாடுகள் ஒரு சிலவற்றின் ஆசீர்வாதத்துடன் ஒரு சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

புலிகளையும் தமிழ் மக்களையும் பிரித்துப் பார்த்து குரூரமான திருப்தியடையச் சில சக்திகள் விரும்புகின்றன. ஆனால் அவையெல்லாம் கற்பனையாகவே இருக்கும். தமிழரின் தலைமைச் சக்தி புலிகள் இயக்கம் தான்.

இதனைத் தமிழ் மக்களும் பல தடவைகள் தேர்தல் நடைமுறைகள் மூலம் உறுதிப்படுத்தியுள்ளனர். தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான சில தனிநபர்கள் தம்மைத் தலைவர்களாகக் கற்பனை செய்து கொண்டு திரிவது கேலிக் கூத்தானது. இது பற்றி புலிகள் இயக்கம் அலட்டிக் கொள்ள விரும்பவில்லை.

**இந்தியாவுடன் நல்லுறவைப் பேணுவது தொடர்பில் விடுதலைப்புலி கள் தற்போது அதிக அக்கறை கொண்டுள்ளதைப்போன்று தென்படுகின்றது. அதேவேளை இது சிலரால் பலவீனத்தின் வெளிப்பாடாகப் பார்க்கப் படுகின்றதே?**

ஈழத் தமிழருக்கும் இந்தியாவுக்குமான உறவு ஒரு வரலாற்று உறவாகும். இடையில் சிங்களத்தின் சதியால் அந்த உறவு அறுந்திருந்தது. மீண்டும் அந்த உறவைக்கட்டி எழுப்பும் புறச் சூழல் இரு தரப்பிலும் ஏற்பட்டு வருகின்றது.

இந்த இரு தரப்பு உறவைச் சிங்கள இனவாதிகள் விரும்பவில்லை. எனவே இந்த முயற்சியைக் கொச்சைப்படுத்தி திருப்தி காண முயல்கின்றன.

**அண்மையில் மும்பையில் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலால் இந்தியாவின் அரசியல் சூழலில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் இதன் பாதிப்பு மேலும் உணரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப் புதிய சூழ்நிலை தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கின்றீர்கள்?**

மும்பை மீதான குண்டுத் தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான ஒரு சீரழிப்பு முயற்சியே அது.

குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளை இந்தியப் புலனாய்வுத்துறை கண்டறிந்துள்ளது. இந்தியாவுக்கு எதிராக சில நாடுகள் திரை மறைவில் செயற்படுகின்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான அந்தப் பகைமை நாடுகளுடன் சிங்கள அரசு உறவு பேணி வருகின்றது என்பது வெளிப்படை. இது இந்திய இராஜதந்திரிகளுக்கும் நன்கு தெரியும். ஒரு இன அழிப்புப் போருக்கு எதிராகத் தமிழீழம் போராடுகின்றது. இது ஒரு விடுதலைப் போராட்டம்.

காலம் காலமாக அடக்கப்பட்ட இனங்கள் விடுதலை கோரி போராடுவது வரலாற்று வழமை. தமிழீழ மண்ணில் தமிழரின் நலன்களை முன்வைத்து எமது போராட்டம் நடக்கின்றது.

**வன்னிக்கு தொடர்ந்து உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதாக அரசு கூறி வருகின்றது. ஆனால் எமக்குக் கிடைக்கும் செய்திகளோ அங்கு மக்கள் பட்டினிச் சாவை எதிர் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன. உண்மையில் அங்கு போதுமான உணவு இருக்கின்றதா? தமிழ் நாட்டில் சேகரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட பொருள்ளகள் வந்து சேர்ந்து விட் டனவா?**

வன்னி மீது சிங்கள அரசு ஒரு பொருண்மியத் தடையை இறுக்கமாகக் கடைப்பிடிக்கின்றது. உணவு, மருந்து மற்றும் விவசாய, மீன்பிடி உள்ளீடுகளை அனுமதிக்கவில்லை. இதனால் உணவுக்கும் தட்டுப்பாடு, மருந்துக்கும் தட்டுப்பாடு,எரிபொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

உலகத் தொண்டு நிறுவனங்களையும் சிங்கள அரசு வெளியேற்றியதால் நெருக்கடி அதிகரித்துள்ளது. சிங்கள அரசும் உதவிப் பொருள்களை அனுப்பவில்லை. உலகத் தொண்டு நிறுவனங்களையும் அனுப்ப அனுமதிக்க வில்லை.

ஒப்புக்காக சிறிதளவு பொருள்களையே அனுப்பி வைத்துள்ளது. தமிழ்நாட்டின் உதவிப் பொருள்களில் ஒரு பகுதி எமது மக்களை வந்தடைந்துள்ளது.

இப்போது வன்னியில் மோசமான உணவுத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இது மேலும் அதிகரித்துச் செல்வதற்கான சாத்தியங்கள் உள்ளன. (ச-5)

# இன்று ஒரு தகவல்

## மூன்று குருமார்கள்

ஒரு ஊரில் ஒரு ஞானி இருந்தார். (சூபிஞானி–ஹசான்) நல்ல அனுபவ சாலி. அவரிடம் கலந்து உரையாடுவதற்காக சில பேர் வந்தார்கள்.

"உங்கள் குரு யார்?" என்று கேட்டார்கள். அவர்நிமிர்ந்து பார்த்தார். எனக்கு ஆயிரக்கணக்கான குருமார்கள் இருக்கிறார்கள். அவர்களது பெயர்களை எல்லாம் சொல்ல ஆரம்பித்தால் காலம் போதாது அதனால் முக்கியமான மூன்று பெயரைப்பற்றி மட்டும் உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்.

அந்த மூன்று பேரில் ஒருவன் – ஒரு திருடன்.

ஒரு சமயம் நான் பாலைவனம் வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது வழி தவறிப்போய் ஒரு கிராமத்துக்குப் போய் விட்டேன். நள்ளிரவு ஆகிவிட்டது.

ஊரே உறங்கிவிட்டது அந்த நேரத்தில் ஒரு ஆள் மட்டும் ஒரு வீட்டின் சுவர் மீது ஏதோ செய்து உள்ளே நுழைவதற்கு முயன்று கொண்டிருந்தான்.

அவனிடம் போய், "நான் இன்றைக்கு இங்கு எங்காவது தங்கமுடியுமா?" என்று கேட்டேன் அதற்குஅவன் "இந்த வேளையில் அது மிகவும் சிரமம். ஒரு திருடனுடன் உங்களால் தங்க முடியுமானால் நீங்கள் என்னுடன் தங்கலாம்" என்றான்.

நான் அவனிடம் ஒரு மாதம் தங்கியிருந்தேன். ஒவ் வொரு நாள்இரவும் "இப்பொழுது நான் என்னுடைய வேலை க்குப் போகிறேன். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போவான்.

திரும்பி வந்ததும், "உனக்கு இன்றைக்கு ஏதாவது கிடைத்ததா? என்று கேட்பேன். அதற்கு அவன் "இன்றைக்கு ஒன்றும். இல்லை நாளைக்கு மறுபடியும் முயற்சி செய்வேன்!" என்பான். ஒருபோதும் அவன் நம்பிக்கை இழந்ததே இல்லை. எப்பொழுதும் சந்தோசமாகவே இருந்தான். நானும் நெடுங்காலமாக தியானம் செய்து கொண்டே இருந்தேன். ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் நான் நம்பிக்கை இழந்து விடுவேன் அப்பொழுதெல்லாம் அந்த திருடனுடைய விடா முயற்சிதான் ஞாபகத்துக்கு வரும்.

என்னுடைய இரண்டாவது குரு – ஒரு நாய்

ஒரு சமயம் எனக்கு மிகவும் தாகமாக இருந்தது. ஒரு நதியை நோக்கி போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு நாயும் ஆற்றில் தண்ணீர் குடிப்பதற்காக வந்தது. அதன் நிழல் ஆற்றின் மேல்தெரிந்தது. அதைப்பார்த்த அந்த நாய் பயந்து குரைக்கத் தொடங்கியது. பின் ஓடிப் போனது. இப்படியே சில தடவைகள் செய்தது. பின்னர் தைரியமாக தண்ணீரில் குதித்தது.

அதன் உருவம் மறைந்து விட்டது. இதைப் பார்த்ததும், எவ்வளவு தான் பயமிருந்தால் கூட ஒருவன் தைரியமாக காரியத்தில் இறங்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டேன். இந்தப்போதனை எனக்கு அந்த நாயிடமிருந்து கிடைத்தது.

என்னுடைய மூன்றாவது குரு – ஒரு சின்னக்குழந்தை.

நான்ஒரு சமயம் நகரத்துக்கு போனேன். அங்கே ஒரு குழந்தை எரியும் மெழுகுவர்த்தி ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தது. நான் அந்தக் குழந்தையைப் பார்த்து, "இதை நீ தான் கொழுத்தி வந்தாயா?" என்று கேட்டேன் "ஆமாம்"என்றது அந்தக் குழந்தை. "சரி... இந்த மெழுகுவர்த்தி முதலில் எரியாமல் இருந்தது. இப்பொழுது எரிகிறது. இதற்கு எங்கிருந்து வெளிச்சம் வந்தது என்று எனக்கு காட்ட முடியுமா?" என்று கேட்டேன்.

இதற்கு அந்த குழந்தை சிரித்துக் கொண்டே மெழுகுவத்தியை ஊதி அணைத்தது. அதற்குப் பின் என்னைப்பார்த்து...

"இப்பொழுது இந்த மெழுகுவத்தியின் வெளிச்சம் போனதை பார்த்தீர்கள் அல்லவா. அது எங்கே போனது? என்று எனக்குச் சொல்லுங்கள்" என்றது.

அந்தக் குழந்தை இப்படிக் கேட்டதும் என்னிடமிருந்த ஆணவம் அழிந்தது. படித்ததெல்லாம் அந்த வினாடியில் சுக்குநூறாகி விட்டது.

எனது முட்டாள் தனத்தை நான் உணர்ந்தேன் என்று அந்த ஞானி எல்லாவற்றையும் விபரமாகக் கூறினார். அதனால் நாம் இன்னாரிடமிருந்துதான் இதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. யாரிடமிருந்தும் எதையும் கற்றுக் கொள்ளலாம்.

ஒருவன் நாய் ஒன்றை வளர்த்து வந்தான். அந்த நாய்க்கு வால் கிடையாது. வாலை யாரோ ஏற்கனவேவெட்டி விட்டார்கள்.

"இந்த நாய்தான் எனக்கு குரு அதனிடமிருந்து கூட நான் பாடம் கற்றுக் கொண்டேன்." என்றான்.

"அப்படி என்ன தான் கற்றுக்கொண்டாய் அந்த வாலில் லாத நாயிடமிருந்து" என்று கேட்டேன்.

"யாரிடமும் வால் ஆட்டக்கூடாது என்ற பாடத்தை அதனிடமிருந்து தான் கற்றுக் கொண்டேன்!" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சகல குடும்பங்களுக்கும் உணவுப் பொருட்களுடன் 5 ஆயிரம் ரூபா நிதி வழங்க வேண்டும்

## விவசாய சம்மேளனத் தலைவர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் "நிஷா" சூறாவளியினாலும் மழை வெள்ளத்தினாலும் குடாநாட்டுமக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளதால் அனைத்துக் குடும்பங்களுக்கும் வேறுபாடின்றி உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவுப் பொருட்களுடன் தலா 5000 ரூபா நிதியும் வழங்க வேண்டும் என்று யாழ். மாவட் தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலை வர் க. முதலியார் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரியுள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் அலுவலகத்தில் செய்மதி மூலம் அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது சமாசத் தலைவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இக் கலந்துரையாடலில் குடா நாட்டிலுள்ள அரசாங்க திணைக்கள அதிகாரிகள், பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் காற்றினாலும் வெள்ளத்தினாலும் விவசாயிகள் மட்டுமல்ல அரசாங்க உத்தி யோகஸ்தர்கள், தனியார் ஊழியர்கள், தொழிலாளர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். 60 ஆயிரம் குடும்பங்கள் விவசா யத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றன. 10 ஆயிரம் ஹெக்டேயர் நெற் செய்கையும் 15 ஆயிரம் ஹெக்டேயர் மேட்டு நிலப்பயிரும் முற்றாக அழிந்து விட்டன.

எனவே, விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடும் மற்றும் குடா நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் 5 ஆயிரம் ரூபா நிதியும் உலக உணவு ஸ்தாபனத்தால் வழங்கப்பட்டு வரும் நலிவுற்றோர் நிவாரணத்தையும் (வெள்ள மட்டை) வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர் கோரியுள்ளார்.

இக்கோரிக்கை கூட்டத்தில் சமூகமளித்த திருந்த அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஓ-6-5)

# சிக்கல்களுக்கு மத்தியில் உணவு விநியோகம்; வன்னி மக்களுக்கு போக்குவரத்து ஒழுங்கு

## வவுனியா அரசாங்க அதிபர் சார்ள்ஸ்

கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் நிவாரணப் பொருட்கள் அனுப்பப்படுகின்ற போது அவற்றை முழுமையான முறையில் செய்வதில் பல்வேறு சிக்கல்களை எதிர் கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பொஸ்டோ DRCமற்றும் UNHCR நிறுவனங்கள் இணைந்து வியாழக்கிழமை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

நீண்ட கால வரலாற்றின் அடிப்படையில் மக்கள் எதிர் நோக்கிய இன்னல்களுக்கு மத்தியில் அவர்களுக்கான மனிதாபிமான உதவிகள் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில்தற்போது வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உணவு விநியோகம் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

"ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் உணவு விநியோகத்தை பூரணமாக நடை முறைப்படுத்த முடியாமல் இருந்தாலும் கூட அவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை இயன்ற அளவில் நாங்கள் உத்தரவாதப்படுத்தியுள்ளோம்"

இதே வேளை கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து அத்தியாவசிய தேவைகளின் நிமித்தம் வவுனியாவுக்குவந்து செல்வதற்கான இரு வழிப் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வன்னியிலிருந்து அத்தியாவசியத் தேவைகள் காரணமாக வவுனியாவுக்கு வரவிரும்புபவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் நெடுங்கேணியிலிருந்து புளியங்குளம் வரை பேரூந்தில் அழைத்து வருப்படுவார்கள் எனவும் அவர்கள் புளியங்குளத்தில் இராணுவத்தினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டு வவுனியாவுக்கு மற்றுமொரு பேரூந்தில் அழைத்து வரப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.

அதே போல வந்தவர்கள் திரும்பிச் செல்வதற்கு வவுனியாவிலிருந்து ஓமந்தைச் சோதனைச் சாவடி வரை நாளாந்தம் இரண்டு பேரூந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட அவர் நெடுங்கேணியிலிருந்து ஆட்களை ஏற்றி வந்த பேரூந்துகள் புளியங்குளத்திலிருந்து ஆட்களை ஏற்றிக் கொண்டு திரும்பும் எனத் தெரிவித்தார்.

"சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் நானும் உடன்பட்டு தற்போது இந்தப் பிரயாண ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்றார் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சார்ள்ஸ். (ஓ–5)

# இராசி பலன்

13.12.2008
(கார்த்திகை 28, சனிக்கிழமை)
பிரதமை முன்னிரவு 9.09மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல்3.47 மணிவரை
இராகுகாலம் 9.21 – 10.51மணிவரை
சுபநேரம் 3.21– 4.51 மணிவரை
விநாயக விரதாரம்பம்

| | |
|---|---|
| மேடம் | சுபநிகழ்வு, கடின முயற்சி, நல்ல தகவல், தொழில் விருத்தி. |
| இடபம் | புதிய திட்டமிடல், ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, அச்சமான நிலை. |
| மிதுனம் | வீண் தொல்லை, முயற்சி தடங்கல், வாகன பயம், உடல் வியாதி. |
| கடகம் | அபூர்வ சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், பிரயாண நன்மை, போசன சுகம். |
| சிங்கம் | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், போசன நன்மை, பணவருவாய். |
| கன்னி | காரிய இடையூறு, சிறு வியாதி, புதிய விடயம், குடும்பக் கவலை. |
| துலாம் | ரோக நிலை, தன்னம்பிக்கை குறைவு, முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம். |
| விருச்சிகம் | அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன் மை, புதிய பொருள் சேர்க்கை, இனிய அனுபவம். |
| தனுசு | தொழில் மந்தநிலை, பணவிரயம், காரிய தாமதம், விவாதம். |
| மகரம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், நண்பர்கள் உதவி, போசன நன்மை. |
| கும்பம் | அமைதிக் குறைவு, வேலைச்சுமை, பிதாசிந்தை, கோபப்படுதல், |
| மீனம் | தெய்வ சிந்தை, பெருமையடைதல், மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு. |

வளவன்

# அதிபர்கள் சேவைசங்கத்தின் புதுவருட நிர்வாகிகள்

இலங்கை தரம் பெற்ற அதிபர்கள் சேவை சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். தலைவராக ஏ.எம். தர்மபால, உபதலைவர்களாக ஏ.சி.எம். ஜவகர்ஷா, எம்.எம். ஜெயத்திலக, பி. விஜயகுமார், ஓ. ஏ. றகீம். செயலாளராக எஸ். யூ. காரியவசம் உப செயலாளராக டபிள்யூ. அபயவர்த்தனா, பொருளாராக எஸ். பாலசூரியர் ஆகியோரும் 14 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் வருடாந்த மாநாடு கொழும்பு டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா, மத்திய மகா வித்தியாலயத்தின் தலைவர் ஏ. எம். தர்மபாலா தலைமையில் நடைபெற்றது. (ஓ–5)

# இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் 2:II இற்கு 249 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் இரண்டு வகுப்பு இரண்டிற்கு நடத்தப்பட்ட திறந்த போட்டி பரீட்சையின் மூலம் 249 பேர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. அரச சேவை ஆணைக் குழுவினால் இந் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் இச்சேவைக்கு 25 தமிழர்களும் 15 முஸ்லிம்களும் 209 சிங்கவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சேவை முன் பயிற்சி எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 3 மாத காலத்திற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் இடம் பெறவிருப்பதாக இலங்கை திட்ட மிடல் சேவைச் சபை உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஓ-5)

மெய்வல்லுநர்

## தொழில்நுட்ப பயிற்றுநர் தரம் II விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்ப பயிற்றுநர் தரம் II இற்கான பயிற்சி நெறிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு கீழ்வரும் ஏதாவதொரு தகைமையுடையோர் விண்ணப்பிக்க முடியும். Diploma in sports, Diploma in physical Education.I.A.A.F. Level I , A.A.S.I. Level I .

பெங்களூரில் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்க செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-6)

மெய்வல்லுநர்

## தொழில்நுட்ப அலுவலர் தரம் IV இற்கான பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்படும் மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் தரம் IV இற்கான பரீட்சை எதிர்வரும் 2009.01.31 ஆம்திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 15, 16,17,18 ஆம் திகதிகளில் கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள இலங்கை தொழில்நுட்ப சங்க உறுப்பினர்களால் நடத்தப்படவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை ரில்கோ விருந்தினர் விடுதியில் இயங்கும் யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தில் பெற்று ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்குமாறும், பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்ற விரும்புவோர் முற்கூட்டியே தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை ஏற்கனவே நடைபெற்று முடிந்த தொழில்நுட்ப அலுவலர் தரம் II இற்கான வாய்மூல பரீட்சையும் இதே தினங்களில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கி அனுசரணையுடன் வல்வெட்டித்துறை மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான முகாம் வல்வை மாவட்ட வைத்தியசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பங்குபற்றி இரத்ததானம் செய்ய விரும்புவோர் தவறாது சமுகமளித்து உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு ஏற்பட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (இ)

# யாழ்.மறை மாவட்ட ஆயர் வன்னி செல்வதற்கு அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்துக்கு வன்னி செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திங்களன்று வவுனியாவுக்கு வந்த யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்துக்கு படையினரால் அனுமதி வழங்கப்படவில்லை.

வவுனியாவுக்கு வந்து சேர்ந்த ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், வன்னிக்குச் செல்வதற்காக படையினரிடம் அனுமதி கோரியிருந்தார்.

ஆனால், அவருக்கு வன்னி செல்வதற்கான அனுமதி படைத்தரப்பினரால் வழங்கப்படவில்லை. இதற்கு முன்னரும் ஒரு தடவை வன்னிக்கான பயணத்தினை மேற்கொண்டிருந்த போது யாழ்.ஆயர் வவுனியாவில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# புயலால் மீன்பிடி ரோலர்கள் பலத்த சேதம்

## நூற்றுக்கணக்கான மீனவர்கள் தொழில் இழப்பு

(யாழ்ப்பாணம்)

'நிஷா' சூறாவளியினால் குருநகர் கடற்கரையில் கட்டி நின்ற பெறுமதிமிக்க 64 மீன்பிடி ரோலர் படகுகள் பலத்த சேதத்துக்குள்ளானதுடன் பல படகுகள் நீருக்குள்ளும் மூழ்கிவிட்டன. இதனால் நூற்றுக்கணக்கான மீனவர்கள் தொழிலை ஆரம்பிக்க முடியாமல் திண்டாடுகின்றனர்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கத்தைச் சேர்ந்த ரோலர் தொழில் செய்யும் மீனவர்கள் ஆழ்கடலில் தொழில் செய்வதற்கு பாதுகாப்புப் படையினர் முன்னர் தடைவிதித்திருந்தனர்.

எனினும், பூநகரிப் பிரதேசத்தை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து குடாக் கடலில் கட்டுப்பாடின்றி மீன்பிடிப்பதற்கு படையினர் அனுமதி வழங்கியிருந்தனர். இதனால் மீனவர்களும் மீன்பிடித் தொழில் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் கடந்த மாதம் 23 ஆம் திகதியிலிருந்து 26 ஆம் திகதி வரை வீசிய நிஷா காற்றினாலும் பெரு வெள்ளத்தினாலும் கடலில் கட்டி நின்ற ரோலர் படகுகள் அனைத்தும் ஒன்றோடொன்று மோதுண்டு பலத்த சேதத்திற்குள்ளானதுடன் பல படகுகள் நீரில் மூழ்கிவிட்டன. இதனால் இத்தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களுக்கு பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன் உடனடியாக தொழிலுக்குப் போக முடியாத நிலை உருவாகியுள்ளது.

தற்பொழுது உடைந்த படகுகளையும் பழுதடைந்த இயந்திரங்களையும் திருத்துவதில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். (இ-5)



யாழ்.செய்திகள்

# வருடாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்க கேட்போர் கூட மண்டபத்தில் சங்கத் தலைவர் ப.கிரிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இன்னிசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (இ-6)

# விஷக்கடிக்கு இலக்கானவர் தேறி வருகிறார்

(அல்வாய்)

விஷக்கடிக்குள்ளாகிய வடமராட்சி வலயக் கல்வி அலுவலகக் கணக்காளர் ஆ.கிரிதரன் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார் என்றும் தற்போது அவருடைய உடல் நிலை தேறியிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-4-19)

# குடாநாட்டு சந்தைகளில் காய்கறிகளின் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சந்தைகளில் காய்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. வெள்ளப் பெருக்கினால் பயிரினங்கள் அழிவடைந்தமையே இதற்கான பிரதான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய ஒரு கிலோ கத்தரிக்காய் 400/-, 1 கிலோ பயற்றங்காய் -400/-, 1 கிலோ வெண்டி - 280/-,1 கிலோ தக்காளி - 300/-,1 கிலோ வெங்காயம் -120/- ,வாழைக்காய் -60/-, பூசணி-60/- என்ற அளவில் விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன்,பச்சை மிளகாய் உள்ளிட்ட சில மரக்கறி வகையினங்களுக்கு சந்தையில் பெருந் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அறியமுடிகிறது. (இ)

# வெள்ள அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்கு "எக்கோ" அமைப்பு உதவ முன்வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

நெதர்லாந்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் மனிதாபிமானத்திற்கான பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு (எக்கோ) வடபகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவை அண்மையில் சந்தித்து மனிதாபிமானத்திற்கான பொருளாதார ஒத்துழைப்பு இலங்கை மற்றும் மாலைதீவு விவகாரங்களுக்குப் பொறுப்பான பணியக முதல்வர் யெருன் ஒட்டர்கவுஸ்ட் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பொர்ஹ் மிகெலெஸ் ஆகியோரிடம் யாழ்.குடாநாட்டில் வெள்ள அனர்த்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் இதுவரை கிடைக்கப் பெற்ற முழுமையான தகவல்கள் அடங்கிய அறிக்கை கையளிக்கப்பட்ட போதே மேற்படி பிரதிநிதிகள் வடபகுதியில் வெள்ள அனர்த்தப் பாதிப்புக்களுக்கு உதவ தமது அமைப்பு முன் வருகின்றது எனத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், வடக்குக் கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் பாரிய பங்களிப்புக்களை வழங்கியுள்ள தாம் தற்போதைய வெள்ள அனர்த்த நிவாரண நடவடிக்கைகளிலும் தங்களது பங்களிப்புக்களை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்ததுடன் சர்வதேச தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களையும் இணைத்து நிவாரண உதவி மற்றும் மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர். (இ)

# நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலக சங்கத்தினால் நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி மட்டம் 1க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்போர், க.பொ.த(உ/த) பரீட்சையில் சித்தி அல்லது உயர் கல்வித் தகைமைகள், அல்லது க.பொ.(சா/த) தரத்தில் சித்தியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூலகம் ஒன்றில் மூன்று வருடம் (3) தொழில் அனுபவம் என்ற தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

## இறை வருகை இன்னிசை வழிபாடு

# விவசாய உள்ளீடுகள், உர வகைகளும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

பட் நீண்ட கால, குறுகியகால மருங்கை

# இலங்கையில் தமிழர் 10

துட்டகாமினியின் போரை 'அன்னியர் ஆதிக்கத்திலிருந்து சிங்களவரை விடுவிக்க' நடத்தப்பட்ட 'ஒரு விடுதலை இயக்கப் போர்' எனப் பேராசிரியர் பரணவிதான வர்ணித்துள்ளார். இப்படியான கருத்துக்கள் தற்காலத்துக்குப் பொருத்தமானவை. ஆதி காலத்துக்கு உரியவை அல்ல. அக்காலத்து வேறும் பல ஆட்சியாளரைப் போல், துட்டகாமினியும் எல்லாளனும் ஆள் நிலம் பெறப் போர் தொடுத்தனர். எல்லாளன் ஆட்சி பற்றி கூறும் மஹாவம்ச நூலாசிரியர், அன்னியராட்சியிலிருந்து விடுதலை பெறச் சிங்கள மக்கள் காத்திருந்த ஓர் ஆட்சிக்காலம் அம்மன்னன் காலத்தை வர்ணிக்கவில்லை. மாறாக, எல்லாளன் ஆட்சி நீதி தவறாத ஓர் ஆட்சி என்ற ஐயத்துக்கிடமின்றி அவர் எடுத்துரைத்துள்ளார். அத்துடன் நில்லாது, மேலும் ஆசிரியர் கூறுவது நோக்கத்தக்கது. தான் பௌத்தனாக இல்லாவிட்டாலும், மன்னன் வழமை தவறாது பௌத்த சங்கத்தாருக்கு ஆதரவு நல்கினான். பௌத்த தூபி ஒன்றின் அருகே தன் தேரை ஓட்டிச் சென்ற போது தேரின் சில்லொன்று தூபியின் கற்கள் சிலவற்றை வீழ்த்தியபோது, தற்செயலாக நடைபெற்ற இச் செயலுக்காக மன்னன் தனக்குத்தானே மரண தண்டனை விதித்தான். இப்படி எல்லாம் எல்லாளன் பற்றி மஹாநாம தேரர் கூறியிருக்க, இக் காலத்தில் பேராசிரியர் பரணவிதான போன்றோர் கொடுத்துள்ள விளக்கங்களுக்காக மஹாவம்ச நூலாசிரியர் மீது குற்றஞ் சுமத்த முடியாது. துட்டகாமினியின் காலம் குறுநிலத் தலைவர்கள் தென்னிந்தியா, இலங்கை உள்ளடங்கிய பிரதேசத்தில் ஆள்நிலம் பெருக்கவும் ஆதிக்கம் பரப்பவும் ஒருவரோடொருவர் கடும் போர் தொடுத்த காலம். தென்னிந்தியாவின் ஒரு பகுதியிலிருந்து அனுராதபுரத்தைக் கைப்பற்ற ஒரு குறுநிலத் தலைவன் நடத்திய படையெடுப்பு, இலங்கையின் தென்பாகமாகிய ரோஹணத்திலிருந்து அனுராதபுரத்தைக் கைப்பற்ற இன்னொரு குறுநிலத் தலைவன் நடத்திய போரை ஒத்ததே. முதலாவது அன்னியப் படையெடுப்பு என்றும் பின்னையது அன்னியப் படையெடுப்பு என்றும் கருதுவது இன்றைய காலத்துக் கருத்துக்களை ஆதிகாலத்து வரலாற்றில் புகுத்தும் செயலாகும்.

போரில் வென்றவனையும் தோற்றவனையும் மஹாநாமதேரர் சான்றோராகவே சித்திரித்துள்ளார் என்பதை மறக்கக்கூடாது. போரில் வெற்றிபெற்ற துட்டகாமினி சான்றோனுக்குரிய பண்புகளுடன் நடந்துகொண்டான். தான் நடத்திய போரில் பல உயிர்கள் இழக்கப்பட்டன என்பது அவனுக்குக் கவலையைக் கொடுத்தது. அதுமட்டுமின்றி, போரில் உயிரிழந்த தனது பகைவனுக்கு அவன் இறந்த இடத்தில் சைத்தியம் (வழிபாட்டுத் தலம்) அமைத்து அதனை வழிபடும் படி குடிகளுக்கு ஆணையிட்டான். இச் செயல் முழு இலங்கை வரலாற்றிலுமே ஓர் ஒப்பற்ற செயலாகும். இவற்றையெல்லாம் மஹாநாம தேரர் தன் நூலில் கூறுவதால் மட்டுமன்றி, அவர் இவ்விடத்தில் சேர்த்துக்கொண்ட இன்னொரு கூற்றினாலும் அவர் மீது குற்றம் சுமத்த முடியாது என்று கூறலாம். எல்லாள மன்னனுக்கு துட்டகாமினி சைத்தியம் எழுப்பியது பற்றிக் கூறும் இடத்தில் மஹாநாம தேரர் வரலாறு எழுதுவதை நிறுத்தித் தன் காலத்தில் நடைபெறும் வழக்கம் ஒன்றைக் குறிப்பிடுகின்றார்.

அதாவது, துட்டகாமினி இறந்து 6 நூற்றாண்டுகளுக்கு மேலாகச் சென்றிருந்தும், அவன் இட்டஆணையை தட்டாது எல்லாளன் சைத்தியத்துக்குத் தன் காலத்திலும் வணக்கம் செலுத்தப்பட்டது என்ற செய்தி. 'இவ் வழிபாட்டின் பொருட்டு, இன்று கூட இலங்கையை ஆள்வோர் இவ்விடத்தை அண்மித்ததும் மேள வாத்தியங்களை நிறுத்திக்கொள்வர்' என்ற கூற்றுடன் எல்லாளன் துட்டகாமினி போர் வரலாற்றை மஹாநாம தேரர் முடிப்பதைக் காணலாம்.

அனுராதபுரத்துக்குடிகள் வெறுத்த ஓர் அன்னிய ஆக்கிரமிப்பாளன் என எல்லாளனை மஹாநாம தேரர் கருதியிருந்தால் இப்படியாகத் தன் காலத்துச் செய்தியைக் குறிப்பிட்டு எல்லாளனை வணங்கும் வழக்கம் தொடர்ந்து இருப்பது பற்றிக் கூற வேண்டிய அவசியம் என்ன?


பேராசிரியர் பரணவிதான எல்லாளனுக்கு எதிரான போரை ஒரு விடுதலைப் போராகக் கருதியமைக்குக் காரணம் ஒன்று உண்டு எனலாம். அனுராதபுரத்திலும் மற்றும் தென்பகுதிச் சிற்றரசுகளிலும் வாழ்ந்தோர் அனைவரும் சிங்கள மக்கள் என்ற எண்ணமும், ஆட்சியாளர் எவராவது சிங்களரல்லாதவராகக் குறிப்பிடப்பட்டிருந்தால் அவர் அன்னியர் என்ற எண்ணமும் பேராசிரியர் கருத்துக்கு அடிப்படையில் இருப்பதைக் காணலாம். இத்தகைய எண்ணக்கருத்துக்களை தொல்லியல் சான்றும் கல்வெட்டியல் சான்றும் தவறானவை எனக் காட்டுகின்றன. இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் பல இனக்குழுக்கள் இலங்கையில் இருந்தன. அவற்றுள் ஒன்று கல்வெட்டுக்களில் 'தமெட' எனவும் பாளி வரலாற்றேடுகளில் 'தமிள' எனவும் குறிப்பிடப்பட்டுள்ள தமிழர் இனக்குழுவாகும். இக் குழுவும் மற்றும் இனக்குழுக்களும் தத்தமக்கென குறுநில அரசுகளை அமைத்துக் கொள்ளும் அளவுக்கு மக்கள் தொகையை கொண்டிருந்திருக்கலாம். இக் குறுநிலங்களின் தலைவர்களுள் பலரும் வேறு பிறரும் அனுராதபுர அரசை கைப்பற்ற ஆசை கொண்டிருப்பர்.

அப்படி ஆசைகொண்டு அனுராத புரத்து அரசை கைப்பற்றிய சகோதரர்கள் சேன, குத்தக எனப் பாளி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள இரு தமிழ்தலைவர்கள். இவர்கள் குதிரை வணிகம் நடத்திய ஒரு வணிகனின் புதல்வர்கள் என மஹாவம்ச நூல் கூறும்.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**


பாளி நூல்களில் இவர் இரு வரையும் வெளியிலிருந்து படையெடுப்பு நடத்தியோர் எனக் கூறவில்லை. அப்படியிருந்தும் இன்றைய வரலாற்றாசிரியர்கள் இவர்களை அன்னியர் என்று வர்ணிக்கத் தயங்கவில்லை.

இவர்கள் தமிழராகவும் வணிகன் ஒருவனின் மக்களாகவும் இருந்தபடியால் அன்னியர் என்ற முடிவுக்கு இவ் வரலாற்றாசிரியர்கள் வந்தனர் போலும். (தொடரும்)



உலக வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு CHA நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களிற்கான சக்கரநாற்காலிகள் வழங்கும் நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யோ.ரவீந்திரன், த.இராசலிங்கம் ஆகியோர் உரிய மாணவர்களிடம் சக்கர நாற்காலிகள் வழங்குவதைப் படங்களில் காணலாம்.

# கல்வியில் சமத்துவமின்மை ஒரு தொடர்கதை



ஆரம்பக்கல்வி ஒரு நாட்டின் அபிவிருத்தி செயல் வழியில் மிக முக்கியமான பகுதியாகும். ஆரம்பக் கல்வியே சமூகத்தின் பெரும்பான்மையினரை அவர்களது அடிப்படைத் தேவைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவுகிறது. சுகாதாரப் பழக்கங்கள், குடியியல் உணர்வு, விவசாயத் திறன்கள், விஞ்ஞான மாற்றங்கள் போன்றவற்றை மக்களுக்கு செயற்பாடுடைய எழுத்தறிவு இருந்தால் மட்டுமே அபிவிருத்தி செய்து இலகுவாக வழங்கமுடியும்.

மூன்றாம் உலகின் அபிவிருத்தி முயற்சிகள் அபிவிருத்தி பிரச்சினைகளின் ஓரத்தை மட்டும் தொட்டுள்ளது. அவற்றின் ''!வழிந்தோடும்'' தாக்கங்கள் இன்னும் கிராமப் பகுதிகளை சென்றடையவில்லை. அதனால் பெறக் கூடிய வளங்களும் சேவைகளும் கிராமப்புற''இல்லாதவர்களுக்கு'' எதிராக முனைவுபடுத்தப்பட்டும் சாய்ந்தும் உள்ளன. இது தொடர்பாக அபிவிருத்திக்கு எதிரான முக்கிய தடைகளுள் ஒன்று. கிராமப் புற மக்களின் உள்ளார்ந்த ஆற்றல்களின் உணர்வின்மையாகும். இவர்களின் உணர்வை உருவாக்குவது இந்நாடுகளை அபிவிருத்தி செய்வதற்கான ஓர் அணுகுமுறையாகும். பொதுவாக கல்வியும் குறிப்பாக ஆரம்பக் கல்வியும் இம் மக்களிடையே உணர்வை உருவாக்குவதற்கான ஒரு சாதனமாகும். இதனை யுனெஸ்கோ அறிக்கையொன்று எடுத்துரைக்கிறது.

இலங்கை இப் பணிக்கு தனது கவனத்தை நீண்டகாலமாகச் செலுத்தி வந்தாலும் கல்வியைச் ஜனநாயகப்படுத்தல் இதுகாலம் வரையில் இவ் வம்சங்களின் அளவுசார் விரிவாக்கத்திற்கே வழிப்படுத்தியுள்ளது. பண்புசார் அம்சங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் இன்னும் குறைக்கப்படவிலில்லை.எனவே தான் முறைசார் பாடசாலை பிள்ளையை முழுமையாக ஊக்குவிக்கத் தவறிவிட்டதையும், பாடசாலை செல்லல், வசதியற்ற குழுக்களுக்கு எதிரான மிக விதிமுறையானதும் குறிப்பனவானதுமாக இருப்பதைக் குறித்துக்காட்டுகின்றன. ஆரம்பக் கல்வி உண்மையிலேயே பயன்பாடுடையதாக இருப்பதற்கும் கிராமிய வசதியற்ற குழுக்களில் உயர் அடைவைப் பெறுவதற்கும் புதிய கற்பித்தல் முறையியல்களை ஏற்றுக்கொள்ளலும் அடிப்படை வசதிகளை வழங்குதலும் உயர் முன்னுரிமை பெற்றிருக்கவேண்டும்.அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு நேர் பிரித்தறிக்கைக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும்.

**கல்வியில் சமத்துவமின்மைக்கான அடிப்படைகள்**

◆ ***மனித வளங்கள்***

மனிதனின் அபிவிருத்தி கற்றலிலிருந்து வெளிப்படுகிறது. பண்புசார், அளவுசார் கல்விக் குறைபாடுகள் ஆகிய இரண்டிற்குமான ஒரு முக்கிய பரிகாரம் ஆரம்பக் கல்வியின் கட்டாய அதிகரிப்பேயாகும். (உலக வங்கி 1975)

மனிதக் கற்றல் நிலைச் சக்தி முறையாக அபிவிருத்தி செய்யப்படாவிடில் விரயமான வளமாகி விடும். அறியாமை மனிதரை ஓர நிலைகளுக்கு ஒதுக்கிவிடும். மனிதர்கள் அறிவீனர்களாக இருக்கும்போது அவர்களது சொந்த அபிவிருத்திக்குக் குறைவான நன்மையளிக்கும் மிக எளிய நிலையிலான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அடிக்கடி நிர்ப்பந்திக்கப்படுவர்.

"எழுத்தறிவுள்ள எழுத்தறிவற்றவர்கள்" விரயமான தலைமுறையினராவர். (கூம்ஸ் 1968) இவர்கள் தமது நாளாந்த செயற்பாடுகளுக்கு பிரயோசனமற்ற கல்வியைப் பெற்றவர்களாவர். இது உண்மையில் ஆரம்பக் கல்வியின் தோல்வியிலிருந்து உருவாகின்றது. கிராமப்புறங்களிலுள்ள வளங் குறைந்த சமூகங்களில் இது மிக உக்கிரமாகவுள்ளது. இவ்வெழுத்தறிவற்றவர்கள் மிகச் சிறிய பொருளாதார நெருக்கடியின் போதும் கூட முதலில் பாதிக்கப்படும் மிகப் பலவீனமான தொகுதியினராவர்.

இத் தொகுதியினர் "நவீன முடிவெடுக்கும் முறையில் நிறைந்திருக்கும் எழுதப்பட்ட சாசனங்களைப் பயன்படுத்து வதற்கான வாசிப்புத் திறன்களையோ, எழுத்துத் திறன்களையோ பெற்றில்லாத நிலையில்

**தம்பியப்பா காங்கேசபிள்ளை**
முன்னாள் அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை

பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள், குடும்பத் திட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றில் கலந்துகொள்ளும்படி'' அழைக்கப்படுதல் அர்த்தமற்றதாகும். எழுத்தறிவின்மையுடன் தொடர்புபட்ட மிகப் பொதுவான இரு பிரச்சினைகள் பாடசாலையை இடையில் விட்டுச் செல்லுதலும், செயற்பாட்டு எழுத்தறிவின்மையுமாகும். (தொடரும்)

1ம் பக்கத் தொடர்ச்சி..

கொமர்ஷல் வங்கியே! உலகின் உ

இணைக்கப்பட்டுள்ள முதல

நிதியியல் துறையில் நிதி உறுதிப்பாட்டை அளவிடும் காரணியான படி ஒன்று மூலதனத்தின் உறுதியான அடித்தளம், ஸ்திரத்தன்மை, மூலத
வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான உலகின் தலைசிறந்த வங்கி தரப்படுத்த

உலகின் நிதித்துறை சமூகம் உலகில் உயர் ஸ்தான வங்கி தரப்படுத்தல் பட்டியலை கூர்ந்து அவதானித்த வண்ணம் இருக்கின்றது. இ

இவ்வாறான தரப்படுத்தல் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்ததொரு உறுதிப்பாட்டினை மீள வலியுறுத்தும் அதேசமயத்தில், இவ்விரு

# இலங்கைச் செழிப்புச் சுட்டெண்

## (SriLanka Prosperity Index) -SLPI

2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இலங்கை மத்திய வங்கியானது பெரும் பிரசாரத்தின் மத்தியில் இலங்கையின் பொருளாதார செழிப்பினை அளவிடும் முகமாக ஆரவாரமாக பெரும் எடுப்பில் புதிய சுட்டெண் ஒன்றினை அறிமுகப்படுத்தியது. அதனை Prosperity Index (SLPI) என பெயரிட்டது. குறிப்பாக இலங்கையின் மாகாண மட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்திகளையும் அதன் மூலம் இடம்பெறும் பொருளாதாரச் செழிப்பினையும் அளவிடுவதற்கான சுட்டியாக இது அறிமுகம் செய்யப்பட்டது.

அத்துடன் இனிவரும் காலங்களில் மாகாண மட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் வளங்கள் செழிப்புச் சுட்டெண்ணை (SLPI)பயன்படுத்தியே ஒதுக்

## சுட்டெண் பற்றிய கருத்து மோதல் இருந்தாலும் மக்கள் நலன் உள்ளடக்கம் வரவேற்கத்தக்கது

கப்படும் எனவும், செழிப்புச்சுட்டெண்ணில் ஏற்படும் முன்னேற்றம் வுளப்பகிர்விற்கான அடிப்படையாக (Criteria) பயன்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

மேற்படி காரணத்தினால் செழிப்புச் சுட்டெண் மாகாண முதலமைச்சர்களின் கவனத்தினையும் ஈர்த்து கொள்ளும் எனவும் எதிர்பார்க்கலாம்.

இலங்கையில் முதல் முதலாக உபதேச மட்டத்தில் (Sub- National Level) இவ்வாறான ஒரு சுட்டெண்ணை அறிமுகப்படுத்துவது இதுவே முதல் தடவையாகும். மாகாண மட்டத்தில் பொருளாதாரச் செழிப்பில் காணப்படும் சமமின்மைகளையும் (Disparities) பிரதேச மட்டத்தில் பயன்படுத்தத்தக்க அள வை அல்லது சுட்டெண்ணாகவும் (Spatial Statistic) செழிப்புச் சுட்டெண் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதிகாரப் பரவலாக்கத்தினதும் மாகாண மட்ட நிர்வாகத்தினதும் மதிப்பீடொன்றினையும் மேற்கொள்ள இச் சுட்டெண் பயன்படுத்தப்படலாம் என்வும் சில பொருளியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

செழிப்புச்சுட்டெண் ஆனது கணிப்பிடப்படும் போது பொருளாதாரத்தில் மூன்று பகுதிகளை அடையாளப்படுத்தி கணிப்பிடப்படுகின்றது. (Composition) அதாவது வர்த்தகச் சூழல் (Business Climate) மக்களின் நலன் (Well being of People) கட்டுமான அடிப் படை (Infrastructure) என்ற மூன்றும் செழிப்புச்சுட்டெண் கணிப்பீட்டின் போது கவனத்தில் எடுக்கப்பட்டது. வேறு வகையில் கூறினால் செழிப்புச் சுட்டெண் (SLPI) வர்த்தகச் சூழல், மக்களின் நலன் , கட்டுமான வசதி என்ற மூன்று சேர்மானங்களினால்(Composition) உருவாக்கப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதார செயலாற்றுகையை அல்லது அதன் செழிப்பினை அளப்பதற்கு பொருளாதாரமொன்றில் அடிப் படைக் கட்டுமான வசதிகள் சிறந்த முறையில் இடம் பெற்றிருக்கவேண்டியது அடிப்படை அம்சமாகும். அதில் இடம்பெறும் முன்னேற்றத்தினை சுட்டெண் கவனத்தில் எடுத்துள்ளது.

இதுபோலவே ஒரு பொருளாதாரத்தில் அதன் இறுதி இலக்கு மக்களின் நலன் மேம்படுதலே. மக்களின் நலன்களில் ஏற்படும் முன்னேற்றத்தினையும் சுட்டெண் கணிப்பீட்டின் போது கவனத்தில் எடுத்தமை வரவேற்றகத்தக்கது.

மூன்றாவதான வர்த்தகச் சூழல் என்பதில் கைத்தொழில் சேவைத்துறைகளில் ஏற்படும் முன்னேற்றத்தினையும் கவனத்தில் எடுத்துள்ளனர். .

இம்மூன்று பிரதான துறைகளுக்குள் 20 வகையான (Sub Indices) களை கணிப்பீட்டின் போது பயன்படுத்தியுள்ளனர். உதாரணமாக மக்களின் நலன்கள் சுட்டியினை கணிப்பதற்கான Sub indicator ஆக சுகாதார சுட்டி ஒன்றும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரி ஒன்றில் படுக்கை வசதிகளின் எண்ணிக்கை, வைத்தியர்களின் எண்ணிக்கை , சிசு மரண வீதம், தாய் மரண வீதம் என்பன சுகாதார சுட்டி Formula வினுள் அடங்கும்.

இவ்விதமாக கணிக்கப்பட்டுள்ள (Computation) செழிப்புச் சுட்டெண் அதன் கீழ் மேல் எல் லைகளாக 0-100 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இச் சுட்டெண் உபதேச மட்டத் தில் பயன்படுத்தத்தக்கதுடன் மாகாணங்களுக்கிடையில் செழிப்பில் காணப்படும் சமமின்மையை அளக்கவும் அதன் மூலம் தேசிய மட்டத்தில் மாகாணங்களின் பொருளாதார செயலாற்றுகையை ஒப்பிடவும் முடியும்.

இச் சுட்டெண் சமீபத்திலேயே இலங்கை மத்திய வங்கியினால் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பிரயோக பயன்பாடு சுட்டெண்ணின் பொருத்தப்பாடு என்பன பற்றி இனி வரும் காலங்களிலேயே அறிய முடியும். இருந்த போதும் இச்சுட்டெண் வெளி வந்து ஓரிரு வாரங்களிலேயே சுட்டெண் பற்றிய கருத்து மோதல்கள் பல்வேறு மட்டத்தினரிடையே எழுந்துள்ளன.

Geo-Informatic பேராசிரியரும் Spatial Statistic துறையில் நிபுணத்துவமும் கொண்ட பேராசிரியர் றஞ்சித் பிறேமலால் டி சில்வா செழிப்புச் சுட்டெண்பற்றி பல கண்டனங்களை வெளியிட்டுள்ளார்.

செழிப்புச் சுட்டெண்ணினை மூன்று வகுதிகளாக வகுத்து கணிப்பீட்டினை மேற்கொண்ட போது இலங்கை போன்ற விவசாயப் பொருளாதாரம் ஒன்றில் விவசாயத்துறை நடவடிக்கைகளுக்கு கனதி கொடுக்கவில்லை என்றும் ஆகையினால் பிரதேச ரீதியான செழிப்பினை இது போதியஅளவு வெளிப்படுத்தாது என்றும் விமர்சனம் செய்கின் றார்.

அதாவது Composition of Indicators தெரிந்த போது இதனை கவனத்தில் எடுக்கவில்லை. மேலும் பல்வேறு கணிப்பீட்டு நியாயங்களை முன்வைத்து SLPI apparently lacking any valid statistical base for it standing an index of prosperity estimation என்ற கண்டனமும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான. விமர்சனங்கள் இச் சுட்டெண் குறித்து முன்வைக்கப்பட்டாலும் உபதேசிய மட்டத்தில் சுட்டெண் ஒன்றின் மூலம் செழிப்பினை அளக்க முயற்சிக்கும் முதலாவது செயற்பாடாக இது அமைவதனால் தேசிய மட்டத்தில் சமமின்மைகளை அளக்கவும்தீர்வு காணவும் ஒரு numerical significance ஆகவும் இது கருதப்படத்தக்கது.

ஏ.சி.ஜோர்ஜ்
வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்

## ரூபா 121 கோடிக்கு ஏலத்தில் விடப்பட்ட அபூர்வ வைரம்

(கொழும்பு)

வரலாறு காணாத வகையில் ஒரு வைரம் ரூ.121 கோடியே 5 லட்சத்துக்கு ஏலமிடப் பட்டுள்ளது. நீலசாம்பல்நிறத்தில்வேறு எந்தவைரத்திலும் காண முடியாத அழகுடன் 35.56 கரட் உள்ள இந்த ஜொலிக்கும் வைரத்தை ஸ்பெயின் நாட்டின் பாண்ட் தெருவில் உள்ள லோரன்ஸ் கிராப்ட் நகை கடை ஏலமிட்டுள்ளது.

இதற்கு முன்பு அதிகபட்சமாக ரூ.57 கோடிக்கு ஏலத்தில் விற்பனையான 13.39 கரட் வைரத்தின் சாதனையை முறியடித் துள்ள இந்த வைரத்தின் பின்னணி ரொம்ப சுவாரசியமானது. 17 ஆம் நூற்றாண்டை சேர்ந்ததும், இந்தியாவை பூர்வீகமாகவும் கொண்ட இந்த அபூர்வ வைரம், ஸ்பெயின் நாட்டின் 4 ஆவது பிலிப் மன்னருக்கு சொந்தமானது.

ஆஸ்திரியாவை சேர்ந்த லிப்போர்ட் என்பவருக்கு தனது மகள் இன்பாண்டா மார்க்கிரெட் தெரசாவை திருமணம் செய்து கொடுத்த போது 4 ஆவது பிலிப் வழங்கிய அன்புபரிசு இது.

மன்னர் வழியில் குடும்ப சொத்தாக இருந்து வந்த இந்த வைரம், 1931 ஆம் ஆண்டுக்கு பிறகு தனியார் வசமானது. தற்போது இந்த வைரத்தை ஏலம் எடுத்துள்ள பிரன்சாய்ஸ் நிறுவனத்தின் இயக்கு னர் கிரிஸ்டி குரியஸ் கூறும்போது, அருங்காட்சியகத்தில் இருக்க வேண்டிய வைரத்தை நான் வாங்கியிருப்பது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது என்றார். (ஓ-5)

## பங்களாதேஷில் ஒரு தாஜ் மஹால் வழக்குத் தொடர இந்தியா ஆலோசனை

(டாக்கா)

இந்தியாவில் உள்ள ஆக்ராவில் ஷாஜகான் மன்னனால் கட்டப்பட்ட தாஜ் மஹால் உலகப்புகழ்பெற்ற கட்டிடம் ஆகும். இது போன்ற கட்டிடத்தை பங்களாதேஷ் டாக்கா நகர் அருகே ஒருவர் கட்டியிருக்கிறார். பங்களா தேஷ் சினிமா டைரக்டரான அஷானுல்லா மோனி என்பவரே இதை 29 கோடி ரூபாய் செலவில் கட்டியிருக்கிறார்.

1980 ஆம் ஆண்டு ஆக்ராவுக்கு சென்ற போது தான் அவருக்கு தாஜ்மஹால் போல ஒரு கட்டிடத்தை கட்டவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. 5 ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கட்டிடத்தை அவர் கட்டினார். இதற்காக இத்தாலியில் இருந்து சலவை கற்களையும், பெல்ஜியத்தில் இருந்து வைரங்களையும் இறக்குமதி செய்தார். 160 கிலோ வெண்கலத்தையும் வாங்கினார்.

இப்போது தாஜ்மஹால் போன்ற கட்டடத்தை அவர் கட்டி முடித்து விட்டார்.

இப்படி ஒரு போலி தாஜ்மஹாலை உருவாக்கியது இந்தியாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தி உள்ளது. பதிப்புரிமையை மீறியதாக வழக்கு தொடரலாமா என்பது பற்றி இந்தியா ஆலோசித்து வருகிறது.

சரித்திர புகழ் பெற்ற சின்னங்களை நகல் எடுக்கக்கூடாது என்று டாக்காவில் உள்ள இந்திய தூதரக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (ஓ-5)

இது ஒரு விளம்பரம்

# உச்ச ஸ்தான 1000 வங்கிகளுக்குள் ...லாவது இலங்கையின் வங்கி

..., மூலதன நிறைவு போன்ற காரணங்களினால், உலக வங்கித்துறையில் முன்னிலையில் உள்ள 1000 தலைசிறந்த வங்கிகளுக்குள் கொமர்ஷல் ...ப்படுத்தலுக்குள் சேர்ந்து கொண்ட முதலாவது இலங்கையின் வங்கியே கொமர்ஷல் வங்கி.

...ன்றது. இத்தரப்படுத்தலை தேர்ந்தெடுத்து தொகுத்து வெளியிடுவது ஐக்கிய இராச்சியத்தின் முதற்தர நிதியியல் சஞ்சிகையான "த பாங்கர்".

இவ்விருது எமது ஊழியர்களுக்கு பெருமையையும், உயர்ந்த தர வங்கியியல் தரத்தை பேணுவதற்கும் உந்துசக்தியையும் வழங்குகின்றது.

## 'சூடான வியாழன்' என்றழைக்கப்படும் கோளின் வளிமண்டலத்தில் நீராவி

### நாசா விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு

பூமியிலிருந்து 63 ஒளியாண்டுகள் தொலைவிலுள்ள கோளொன்றின் வளி மண்டலத்தில் நீராவி இருப்பதற்கான சான்று தமக்குக் கிடைத்துள்ளதாக நாசா விண் வெளி முகவர் நிலைய விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆய்வின் முடிபுகள் "நேச்சர்' விஞ்ஞான சஞ்சிகையில் வெளியிடப் பட்டுள்ளன.

'சூடான வியாழன்' என்றழைக்கப்படும் மேற்படி கோளின் மேற்பரப்பின் வெப்ப நிலை 900 பாகை செல்சியஸ் ஆகும்.

மேலும் நாசா விண்வெளி முகவர் நிலைய விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு ஆய்வின் பிரகாரம், இந்தக் கோளின் மேற்பரப்பில் காபனீரொட்சைட் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது

'சூடான வியாழன்' என செல்லமாக அழைக்கப்படும் ' எச்.டி.189733பி' என்ற இக் கிரகமானது எமது சூரிய மண்டலத்திலுள்ள வியாழக்கிரகத்தின் வளி மண்டலத்தை ஒத்த தன்மையைக் கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.

'சூடான வியாழன்' கிரகத்தின் வெப்பமான மேற்பரப்பிலிருந்து வெளிப்பட்ட வெப்பக் கதிர்ப்புக் காரணமாக, அக் கிரகத்தின் வளிமண்டலத்தில் கனமான காற்றோட்டம் நிலவுவதாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கூறு கின்றனர். இந்தக் கோளானது அதி நவீனஹபின்' விண்வெளி தொலைகாட்டியைப் பயன் படுத்தி ஆய்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக் கது.

இந் நிலையில் இந்தக் கண்டுபிடிப்பானது மனித வாழ்க்கைக்கு பொருத்தமான கோள்கள் அண்டவெளியில் இருக்கக் கூடும் என்ற நம்பிக்கையை உறுதிப் படுத்தியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். (ஓ-5)

## மீண்டும் சுனாமி வரும் விஞ்ஞானிகள் எச்சரிக்கை!

(புதுடில்லி)

கடந்த 2004ஆம் ஆண்டு கடலோரப் பகுதிகளை சுனாமி தாக்கியதைப் போல அடுத்த 10 ஆண்டுகளில் மீண்டும் ஒரு சுனாமி தாக்குதல் நிகழலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

சுமத்திரா தீவின் மேற்குப்பகுதியில் 700 ஆண்டுகளாக நிகழ்ந்த பூகம்பத்தைப்பற்றி ஆய்வு மேற்கொண்ட விஞ்ஞானிகள் இதைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் கூறியுள்ளதாவது,

ஒரு மரத்தின் அடிப்பகுதி ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சி அடைகிறது. அதேபோல் கடலிலுள்ள பவளப்பாறைகளும் சுற்றுச்சூழலில் மாறுதல் நிகழும் போது மாற்றம் அடைகின்றன. எப்பொழுதெல்லாம் பூகம்பம் நிகழ்கிறதோ அப்போதெல்லாம் கடல் மட்டம் உயர்கிறது. பவளப்பாறைகளும் விரிவடைகின்றன. இதுவே சுனாமி போன்ற பேரலைகள் உருவாக காரணம்.

கடந்த 2007 செப்ரெம்பர் வரையிலான 50 ஆண்டுகாலத்தில் அதிக அளவில் பூகம்பங்கள் உருவான 700 கிலோமீற்றர் தூரகடல்பகுதியில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டதில் இந்த விபரங்கள் தெரியவந்தன. கடந்த 700 ஆண்டுகளில் இப்பகுதியில் ஏராளமான பூகம்பங்கள் உருவாகியுள்ளன.

அடுத்த 10 ஆண்டுகளில் இப்பகுதியில் புதிதாக ஒரு பூகம்பம் ஏற்படும். அப்போதும் சுனாமி உருவாகும். எப்போது புதிய பூகம்பம் நிகழும் என்பதை உறுதியாகக் கூற முடியாது. ஆனாலும் அந்த பூகம்பம் மற்றும் சுனாமியால் ஏராளமான பொருள் இழப்பு மற்றும் உயிர் இழப்பு ஏற்படும். இவ்வாறு விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)


## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -வ.து

### நத்தார் புதுவருட பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு





**01. கூட்டுறவு நகர் 1 127 ,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**

**02.கூட்டுறவு நகர் 2 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

**01. கேக்:**

கேக் தயாரிப்பதற்கான சகல பொருட்களும் உள்ளடக்கப்பட்ட ரூபா.750/- பெறுமதியுடைய பொதி ஒன்று விசேட விலைக் கழிவுடன் ரூபா 690/-ற்கு விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

500 கிராம் மாஜரின், 500 கிராம் மா, 500 கிராம் சீனி, 50 கிராம் பிளம்ஸ், 50 கிராம் கஜு, 50 கிராம் கலர் புருட்ஸ், முட்டை, பேக்கிங்பவுடர், ஒயில்பேப்பர், வனிலா, 50 கிராம் இஞ்சி அல்வா, 50 கிராம் பூசணி அல்வா, 50 கிராம் மிக்ஸ் புரூட்.

**02. காகிதாதி:**

கொள்வனவு செய்யும் காகிதாதி பொருட்களின் அளவுக்கேற்ப இரண்டு பேனா அல்லது பென்சில் இலவசமாக வழங்கப்படும்



| கொள்வனவு செய்யும் பொருள் | கொள்வனவு செய்யும் தொகை | இலவசமாக வழங்கப்படும் பொருள் |
|---|---|---|
| 80 பக்கம் அட்லஸ் கொப்பி | 12 | 02 பேனா இலவசம் |
| 120 பக்க அட்லஸ் கொப்பி | 6 | 02 பேனா இலவசம் |
| 160 பக்க அட்லஸ் கொப்பி | 5 | 02 பேனா இலவசம் |
| 200 பக்க அட்லஸ் கொப்பி | 4 | 02 பேனா இலவசம் |
| 240 பக்க அட்லஸ் கொப்பி | 4 | 02 பேனா இலவசம் |
| 320 பக்க அட்லஸ் கொப்பி | 4 | 02 பேனா இலவசம் |
| 400 பக்க அட்லஸ் கொப்பி | 3 | 02 பேனா இலவசம் |



| கொள்வனவு செய்யும் பொருள் | கொள்வனவு செய்யும் தொகை | இலவசமாக வழங்கப்படும் பொருள் |
|---|---|---|
| சீ.ஆர் கொப்பி 01 | 2 | 01 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 02 | 3 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 03 | 3 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 04 | 2 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 05 | 2 | 02 பேனா இலவசம் |
| இரட்டை றூள் | 6 | 02 பென்சில் இலவசம் |
| நாலு றூள் | 6 | 02 பென்சில் இலவசம் |



**03. பாதணிகள்:**

அதிரடி விலைக் கழிவில் விற்றுத்தீர்த்தல் முறையில் சகல பாதணிகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்பட்டுள்ளது.

**04. பரிசுப் பொருட்கள்**

பிறந்ததினம்,திருமண நிகழ்வுகள் மற்றும் கொண்டாட்டங்களின் போது வழங்கக் கூடிய பரிசுப் பொருட்கள் வகைகளும் விசேட விலைக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

**05.இக்கால கட்டத்தில் கொக்கக்கோலா 1.5 லீற்றர் சோடா 05 கொள்வனவு செய்பவர்களுக்கு 01 கொக்கக்கோலா 1.5 லீற்றர் சோடா இலவசமாக வழங்கப்படும்.**

சோடா ஒன்றின் விலை ரூபா.140/-மட்டுமே.

06. மேற்படி காகிதாதி பொருட்கள் கொள்வனவு செய்யும் பாவனையாளர்கள் அதற்குரிய சிட்டையை பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் 2009 ஜனவரி மாதத்தில் நடைபெறும் பரிசு குலுக்களில் தாங்களும் அதிஷ்டசாலியாக முடியும்.

மேற்படி விலைக் கழிவு விற்பனையில் தாங்களும் பங்கேற்று நத்தார் புதுவருடப்பண்டிகையைச் சிறப்பாக கொண்டாடுமாறு எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சீ/1843)

**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்**

எமது நந்தார் புதுவருட நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.



நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச்சபை பேராலயத்தில் நடைபெற்ற தென்னிந்தியத்திருச்சபையின் யாழ். மாவட்ட அனைத்து சிறுவர் இல்ல பிள்ளைகளின் சிறுவர் உலகமும் நத்தார் இன்னிசை நிகழ்விலும் தென்னிந்தியத்திருச்சபை பேராயர் அதி வண கலாநிதி டி.எஸ்.தியாகராஜா அவர்கள் ஆராதனை நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதனையும், சிறுவர் இல்லப்பிள்ளைகள் நத்தார் இன்னிசை பாடல்கள் இசைப்பதனையும் நாடக நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:கோபி)

# நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மீண்டும் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச் சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார். இந்த வருடம் இதுவரை டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 22பேர் உயிரிழந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் நிலவும் மாவட்டங்களில் விசேட நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவிக்கின்றது. (ஓ-6)

# இணையத்தளம், மின்னஞ்சல் உபயோகம் அதிகரிப்பு

## தொகை மதிப்பீட்டு திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

இணையத்தளம் மற்றும் மின் அஞ்சல் என்பவற்றை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது என்று தொகை மதிப்பீட்டு புள்ளிவி பரத்திணைக்களம் தெரிவித்துள்ளது. 5வயதில் இருந்து 70 வயது வரையிலான மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட மதிப் பீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில்திணைக்களம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

45 சதவீதமானோர் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது இணையத்தளத்தை உபயோகித்துள்ளனர்.

அதே வேளை, 42 சதவீதமானோர் மின்னஞ்சலை உபயோகித்துள்ளனர். 30 சத வீதமானோருக்கு மின்னஞ்சல் முகவரியும் உள்ளமை தெரிய வந்துள்ளது. (ஓ-4)

# இலங்கையில் உள்ள சிவாஜிலிங்கம் எம்.பிக்கு ஆபத்து நேர்ந்தால் பிரதமரே பொறுப்பேற்கவேண்டும்

## பழநெடுமாறன் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கையில் உள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் பிரதமர் மன்மோகன் சிங்தான் பொறுப்பேற்க வேண்டும் என தமிழ்த்தேசிய இயக்கத்தலைவர் பழ நெடுமாறன் தெரி வித்துள்ளார்.

தமிழகத் தலைவர்களை விமர்சித்து இலங்கை இராணுவத்தளபதி பேசிய கேலிப் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து கடந்த புதன் கிழமை சென்னையில் உள்ள இலங்கைத் துணைத்தூதரகம் அருகே ம.தி.மு.க. கட்சியினர் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைத் தளபதி சரத்பொன்சேகா பேசியிருப்பது தமிழகத்தில் உள்ள தலைவர்களையும்,ஒட்டுமொத்த இந்தியாவில் உள்ள தலைவர்களையும் இழிவுபடுத்தும் செயலாகும்.

இதற்கு இந்திய அரசு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கடும் கண்டனத்தை தெரிவிக்க வேண்டும்.

இந்தியாவில் ஈழப்படுகொலை குறித்த பரப்புரையில் ஈடுபடுவதால் சிவாஜிலிங்கம் எம்.பியை உடனடியாக இந்தியாவில் இருந்து வெளியேறுமாறு இந்திய அரசு அறிவித்துள்ளது.

ஆனால் அவர் இந்தியாவில் இருந்து இலங்கைக்குச்சென்ற அடுத்த நிமிடமே அவரது உயிர் பறிக்கப்படும் என்பதால் அவர், தாய் தமிழகத்தில் அடைக்கலம் புகுந்துள்ளார். அவர் இலங்கைக்குச் சென்றவுடன் அவரது உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் அதற்கு இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்தான் பொறுப்பேற்க வேண்டும் என்றார் நெடுமாறன்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் ,இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் சி.மகேந்திரன், தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம் தியாகு, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர். எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஓ-5)

# அம்பாறையில் 2 பெண்கள் உட்பட 28 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில் பிரதேசத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் கடந்த சில நாட்களில் நடத்திய தேடுதலில் 28 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் இரண்டு பெண்கள் அடங்குவதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக படையினரின் தேடுதல் நடவடிக் கைகள் அதிகரித்துள்ளன. அத்துடன் கடத்தப்படுவது காணாமல் போவது போன்ற சம்பவங்களும் இடம்பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதேவேளை கடந்த ஒரு வாரத்தில் மட்டும் திருக்கோவில் பிரதேசத்தில் வறுமை காரணமாக 3 இளம் பெண்கள் தற்கொலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு காட்டும் எவரும் ஈனத்தமிழர்களாக மாறிவிடக்கூடாது

## திராவிடர் கழகத் தலைவர் வீரமணி தெரிவிப்பு


(சென்னை)

சிங்களவர்களின் குரலாக தமிழ் நாட்டில் இருந்து பிரதான எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா சதா ஒலித்துக்கொண்டிருக்கிறார் என திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி சாடியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது ,

தமிழ்நாட்டில் அண்ணா பெயரில் கட்சி. அதனையே ஆரிய மாயை அபகரிப்பு.எந்தச் சொல்லுக்காக இலங்கை இராணுவத் தளபதியை கண்டிக்கிறார்களோ,அதே கருத்தினை வெளிப்படையாக அறிக்கைகள் மூலம் பொறுப்பான ஒரு எதிர்க்கட்சித் தலைவர் என்பதையும் புறந்தள்ளிவிட்டு ,இலங்கைத் தமிழ் மக்களுக்காக தமிழக முதலமைச்சர் வசூலித்த நிவாரண நிதி சேகரிப்பை கொச்சைப்படுத்தினார்.

ஆனால் உண்மை என்ன? படங்களுடன் செய்திகள் வந்தனவே. ஜெயலலிதாவின் புளுகு பலூன் வெடித்து சிதறிவிட்டதே. சிங்களவர்களின் குரலைத்தானே இவர் சதா ஒலிக்கிறார்.



காரணம் என்ன? தமிழர் அல்லர் என்பது தானே. தமிழ் நாட்டு வாக்காளர்களை எவ்வளவு அடி முட்டாள்கள் என்று அவர் நினைத் திருக்கிறார். இவ் வளவையும் மறந்து விட்டு, அந்த அணிப்பக்கம் ஓடினால் இரண்டு ஒரு சீட்டுகள் கிடைக்கும் என்று ஓடுகிறார்களே- தமிழன் நிலை இவ்வளவு கேவலமாக ஆகலாமா?

ஜெயலலிதா, சுப்பிரமணிய சாமி,சோ, கல்கி-பார்ப்பன ஊடகங்கள் இன அடிப்படையில் மன அடிப்படையில் ஒன்றாக நிற்கின்றன. தமிழர்களின் கடமை என்ன? சிங்களவருக்கு ஆதரவு குரல் கொடுப் பவருடன் கூட்டு வைத்துக்கொண்டு ஈழத் தமி ழர்களுக்கு ஆதரவாக முழங்குவோம் என் பது அசல் இரட்டை வேடம் அல்லவா? ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு காட்டும்போது நம் மில் எவரும் ஈனத்தமிழர்களாக மாறிவிடக் கூடாது என்றார் அவர். (ஓ-5)


## ஆயுட்கால அங்கத்தவர்

SRI LANKA RED CROSS SOCIETY

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஆயுட்கால அங்கத்தவர்கள் தங்களின் விபரங்களை கீழ்காணும் விண்ணப்பப் படிவத்தை தயாரித்து அனுப்பும்படி வேண்டுகின்றோம்.

* ஆயுட் கால அங்கத்தவர் பெயர் :
* நிரந்தர விலாசம் :
* தற்காலிக விலாசம் :
* ஆயுள் அங்கத்தவர் இலக்கம் :
* அலகு :
* பிரிவு :

தாங்கள் தற்போது வசிக்கும் பிரிவிலா அல்லது ஏற்கனவே தங்களின் அங்கத்துவம் பெற்ற பிரிவிலா தொடர்ந்து அங்கத்துவம் பெற விரும்புகின்றீர்கள்

* தற்போது வசிக்கும் பிரிவு ☐ *ஏற்கனவே உள்ள பிரிவு ☐

31.12.2008க்கு முன்பு அனுப்பி வைக்கும்படி கேட்கப்படு கின்றீர்கள். தங்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்கும் தங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்குமான ஓர் நடவடிக்கையாகும். இதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி*

*மேலதிக விபரங்களுக்கு:*
**73. கண்டி வீதி, யாழ்ப்பாணம்**

*செஞ்சிலுவைச் சேவையில்*
கௌரவ செயலாளர்

(C1768)

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளையின் 24 மணிநேர இரவு, பகல் அம்புலன்ஸ் சேவை தொடர்புக்கு: 021-2222561, 060 2215555, 0773979390**

அனுபவம் என்பது மனிதர்கள் தாங்கள் புரிந்த தவறுகளுக்கு இட்ட பெயராகும்.

~ அப்துர் றஹீம்

வலம்புரி

## வீதி நெருக்கடியைத் தவிர்க்க மாற்று ஏற்பாடு உடன் தேவை

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விபத்தொன்றில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாகப் பலியானார்.

இந்தச் சம்பவம் அப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது. இத்தகைய விபத்துக்கள் தவிர்க்கப்படக் கூடியவை. ஆனால் யாழ்ப்பாணத்தின் ஒடுங்கிய வீதிகளும், வாகன நெரிசலும் வீதி ஒழுங்குகளைக் கடைப் பிடிக்காத வாகன சாரதிகளும், பொதுமக்களும் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதால் விபத்துக்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

நேற்றுமுன்தினம்லொறியில்நசியுண்டுஇறந்துபோன அந்த இளம் குடும்பஸ்தரின் மரணத்துக்கான காரணங்களை ஆராய்கின்றபோது, வாகன நெரிசலே முதன்மைக் காரணமாகத் தெரிகின்றது.

யுத்தத்தினால் ஏற்பட்ட மரணம், சுனாமியினால் இழந்த மனித உயிர்கள், சிக்குன்குனியாவின் பாதிப்புக்கள் என்ற நீண்ட துயரத்தில் விபத்து மரணமும் இணையுமாக இருந்தால், யாழ்ப்பாண மக்களால் துன்பத்தைத் தாங்க முடியாமல் போகும்.

எனவே இது விடயத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இதற்காக யாழ்.நகரத்துக்கான வீதிகளை ஒரு வழிப் பயணம், இரு வழிப் பயணம் என்ற ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அவசியமாகும்.

அதேநேரம் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காத வாகனங்களைப் பறிமுதல் செய்வதிலும், பொறுப்பற்ற சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்வதுமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது உடனடித்தேவையாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தின் போக்குவரத்தை நோக்கும் போது, தெய்வத்தின் செயலாகவே விபத்துக்கள் தவிர்க்கப்படுகிறதேயன்றி வேறு எந்த விதமான போக்குவரத்து விதிகளும், வீதிகளும் உதவவில்லை என்பது கவனத்தில் கொள்ளத் தக்கது.

அதே சமயம் இளைஞர்கள் வேகக் கட்டுப்பாடின்றி மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துவதும் மாணவர்கள் துவிச்சக்கர வண்டிகளில் சமாந்தரமாகச் செல்வதையும் காண முடிகின்றது.

குறிப்பாக தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர்கள் வகுப்பு நிறைவடைந்ததும் பயணிக்கும் விதம் மற்றவர்கள் பற்றிய எந்த எண்ணமும் அவர்களிடமில்லை என்பதை நிரூபிப்பதாகவுள்ளது.

எனவே யாழ்ப்பாணத்தின் வீதி ஒழுங்கு பற்றி உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இதற்காக சமிக்ஞை விளக்குகளைப் பொருத்தி அவற்றின் ஊடாக வாகனங்கள் நெரிசலாகச் செல்வதையும் ஒரு வழிப் பயணத்தை அமுல்படுத்தி போக்குவரத்தை இலகுபடுத்துவதுமான செயற்பாடுகளைச் செய்வது எதிர்கால விபத்துக்களைத் தடுக்கப் பேருதவியாக அமையும்.

# ஒருவேளை உணவுடன் வாழும் மீள்குடியமர்த்தப்பட்ட கல்மடு மக்கள்

(கொழும்பு)

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்ட வவுனியா கல்மடு பகுதி மக்கள் போதியளவு வருமானமின்றி நாளொன்றுக்கு ஒருவேளை உணவையே உண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மன்னார் மாவட்டத்தின் எல்லையில் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கல்மடு கிராமம் 400 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டது.

மோதல்களால் அக்கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் 2002 ஆம் ஆண்டு பிற்பகுதியில் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

400 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்ட அக்கிராமத்தில் 375 ஏக்கர் நிலப்பரப்பு உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதால் எஞ்சிய பகுதியிலேயே மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

கிராமத்தின் பெரும்பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருப்பதால் வருமான மார்க்கமாக கால்நடைகளைப் பராமரிக்கவோ, விவசாயத்தில் ஈடுபடவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் கல்மடு கிராமத்தைச் சேர்ந்த பெரும்பாலானவர்களின் வருமானங்கள் இழக்கப்பட்டி ருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வரும் மக்களில் 50 வீதமான மக்களுக்கு ரூ 360 பெறுமதியான சமுர்த்தி முத்திரை வழங்கப்பட்டுள்ளது.

அதுவே அவர்களுக்கான ஒரேயொரு உதவி நிவாரணமாகவும், வருமானமாகவும் அமைந்துள்ளது. இவ்வாறான நிலையில் அங்கு 70 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இதேவேளை கல்மடுக் கிராமத்தின் அயல் கிராமங்களில் ஒன்றான ஈச்சங்குளம் பகுதியில் விடுதலை புலிகளின் மாவீரர் துயிலும் இல்லம் உள்ளமையாலும் அடிக்கடி சுற்றிவளைப்புத் தேடுதல்கள் இடம்பெறுவதாக அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

மாலை ஆறு மணியுடன் எந்த ஒரு கிராம வாசியும் வெளியில் நடமாட முடியாததுடன், கிராமத்திற்கு மின்சாரம் இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

கிராம மக்களுக்கு இரவில் ஏதேனும் அவசரம் ஏற்பட்டால் விளக்குகளுடன் இராணுவத்தினரை நாடி அவர்களுக்கு அறிவிக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இரவில் கிராமத்தில் உள்ள ஒருவருக்கு சுகவீனம் ஏற்படும் பட்சத்தில் அவர்கள் இராணுவத்தினருக்கு முறையிட்டு இராணுவத்தினர் ஈச்சங்குளம் தாண்டிக்குளம் வீதியில் உள்ள இராணுவ முகாம்களுக்கு அறிவித்ததன் பின்னரே சுகவீன முற்றவரை வவுனியா பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முடியும் என கிராம வாசிகள் தெரிவித்துள்ளனர்.

தாம் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் குறித்து வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தபோதும் இதுவரை எந்த உதவிகளும் செய்து கொடுக்கப்படவில்லையென வவனியா கல்மடு படிவம் ஒன்று பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

(ஓ-5)

# அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உள்ள பரீட்சைக்கு தோற்ற முடியாதோருக்கு விசேட பரீட்சை

## பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்கு தோற்ற முடியாத மாணவர்களுக்கென விஷேட பரீட்சைகளை நடத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெறும் யுத்தம் காரணமாக அவர்களுக்குப் பரீட்சையில் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இத்தகைய சிறுவர்கள் குறித்த தகவல்களை அந்தந்த மாவட்டங்களிலுள்ள கல்வி அதிகாரிகளூடாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளை இவ்வருடம் 4470 நிலையங்களில் பரீட்சை சுமூகமாக நடை பெறுவதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார். (ஓ-6)

## எயிட்ஸ் தினத்தை முன்னிட்ட திறந்த கட்டுரைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச HIV/ AIDS தினத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் நடத்தப் பெற்ற திறந்த கட்டுரைப் போட்டியில் ப. இராஜேஸ்வரன் ஆசிரியர் சரவனை சின்னமடு றோ.க.த.க. பாடசாலை முதலாமிடத்தையும், செல்வி. சிவசித்திரா பழனி ஆசிரியர் யாழ். இந்து மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும், ம.நிமலன் அபிவிருத்தி உதவியாளர் கோட்டக் கல்வி அலுவலகம் நல்லூர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

ஓ

## புதிய கல்வித்திட்டம் தொடர்பான பாடநூல் அறிமுக நிகழ்வுகள்

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 8 இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்வித் திட்டம் தொடர்பான பாடநூல் அறிமுகம் பாடசாலை விடுமுறை காலத்தில் நடத்தப்படவுள்ளது.

இதன் பிரகாரம் வட. இந்து மகளிர் கல்லூரியில் இம் மாதம் 20ஆம் திகதி விஞ்ஞானம் (தமிழ்மொழி மூலம்), 22 ஆம் திகதி விஞ்ஞானம் (ஆங்கிலம் மொழி மூலம்) நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் 21 ஆம் திகதி வரலாறு, 22 ஆம் திகதி புவியியல், 23ஆம் திகதி குடியியல் மற்றும் நெல்லியடி ஆசிரியர் வளநிலையத்தில் 22ஆம் திகதி கணிதம் ஆகிய பாடங்களுக்கான அறிமுக நிகழ்வு நடைபெற உள்ளது.

இதேவேளை 22, 23 ஆகிய திகதிகளில் தகவல் தொழில் நுட்ப பாடம் புலோலி மெ.மி.த.க பாடசாலையில் உள்ள கணனி வளநிலையத்தில் நடைபெறவுள்ளது.

தகவல் தொழில் நுட்பச் செயலமர்வு ICT பாடம் கற்பிக்கும் கணனி வள நிலையத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களினால் நடாத்தப்படும் என வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

(ஓ-19)

## யாழ்ப்பாணப் பட்டினத்தை அபிவிருத்தி செய்ய உடன்படிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பட்டினத்தை சேரிக் குடிசைகள் அற்ற ஒரு பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்குரிய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நகர் அபிவிருத்தி அமைச்சும் யாழ்ப்பாண மாநகரசபையும் இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அலரிமாளிகையில் அமைச்சர்கள் டினேஸ் குணவர்த்தன மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் சமீபத்தில் இந்த ஒப்பந்தத்தில் கைசாத்திட்டுள்ளனர்.

(ஓ-4)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி சுயநலமின்மை வெற்றியைத் தரும்



வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் பின்னணியில் எங்கேயோ அளவற்ற ஒருமையுணர்வும் அளவற்ற நேர்மையும் இருந்தே தீரும்.

ஒருவனது சிறந்த வெற்றிக்கு இவையே காரணம். அவன் ஒருவேளை தன்னலத்தை முற்றிலும் நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றான்.

அவன் முற்றிலும் சுய நலமற்றவனாக இருந்திருந்தால்அவனது வெற்றி புத்தரது வெற்றியையும் யேசு நாதரின் வெற்றியையும் போல் மிகச் சிறந்ததாக விளங்கியிருக்கும். எங்கேயும் சுய நலமின்மையின் அளவைப்பொறுத்தே வெற்றியின் அளவும் உள்ளது.

தொடர்ந்து விரிந்துகொண்டிருப்பது தான் வாழ்க்கை, குறுகுவது சாவு.சொந்த சுகங்களையே கவனித்துக்கொண்டு, சோம்பேறியாகக் காலம் கழிக்கின்ற சுய நல மனிதனுக்கு நகரத்தில் கூட இடம் கிடையாது.

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 2



வெறுமனே மாச்சத்துக்குரிய பயிர்களான நெல், சோளம், கோதுமை இன்னும் உருளைக்கிழங்கு போன்றவற்றை அளவாக உட்கொண்டு வயிற்றில் உள்ள மீதி இடத்திற்கு புரத மற்றும் நார்ப்பொருட்களை உணவாக்கிக்கொள்ளலாம். பசுமைப் புரட்சியில் அனைவருக்கும் உணவு என்ற தத்துவத்தை வைத்துக்கொண்டு பயிர்களின் உற்பத்தி நடந்தேறியிருக்கிறது. இருந்தாலும் விரைந்து விபரீதத்திற்கு உட்பட்ட உணவைத் தவிர்த்து அனைத்தையும் கொடுக்கக் கூடிய உணவுப் பழக்கத்திற்கு எம்மை மாற்றிக் கொள்ளவேண்டும்.

நீரிழிவு போன்றவற்றிலிருந்து விடுபடவும் இதுதானே வழி.

பசுமைப்புரட்சியிலே சிறுதானியங்களின் உற்பத்திக்கும், அவற்றின் பயன்பாட்டிற்கும், குறிப்பாக சிறுதானியங்களிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய தின் பண்டங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கலாம்.

குரக்கன், வரகு, தினை, சாமை என எம்மூரில் சிறப்பாக விளைவிக்கக் கூடிய சிறுதானியங்கள் இவை. இந்து சமய நிகழ்வுகளிலே மட்டும் நவதானியங்களாக இவற்றை விதைத்து அகமகிழ்ந்து போகும் எம் இன சனத்திற்கு அவற்றை உணவாக்கிக் கொள்ளத் தெரியவில்லையே! குரக்கனிலிருந்து செய்யப்படும் உணவிற்கு தனி மதிப்புண்டு.




குரக்கனில் அதிக சக்தி உண்டு. குறிப்பாக நீரிழிவு நோய்க்கு சிறந்த உணவென எம் முன்னோர் சொல்லி எழுதி வைத்திருந்தாலும் விளக்கீடு, தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் பேய்களுக்கு படைப்பதற்காக என் தச்சந்தோப்புக் கிழவியும் குரக்கனைக் குற்றி, அவித்து பிட்டாக ஆக்கி வைத்துப் படைப்பார். பேய்களுக்கு வரும் நீரிழிவு நோய்க்காக இவையெல்லாம் வைத்துப் படைத்தாலும் கடைசியில் நாம் அனைத்தையும் அள்ளியுண்டு உணவு சம நிலையை குழப்பிவிடுகிறோம். ஆனாலும் 'பேய் படையல்' எம்மை விட்டுப் பிரிந்தவர்களுக்கானதுதானே.

இவ்வாறானதொரு அனைத்தும் கலந்த உணவை உண்ணும்போது சுகாதாரத்தை இலகுவாகப் பேணிக்கொள்ளலாம். வயது வேறுபாடில்லாது சிறியவர் முதல் முதியவர் வரை நீரிழிவு நோய் அனைவரையும் ஆட்டிப் படைக்கின்றது.

பசுமைப் புரட்சியினூடாக அனைத்தும் கலந்ததொரு உணவுப் பழக்கத்திற்கு எம்மவர்களை மாற்றியமைக்க வேண்டும். இங்கே வயதானவர்களின் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும்.

பசுமைப் புரட்சியில் விளைச்சல் ஒன்றே கருத்தாக இருப்பதால் தேவை கருதிய அனைத்தும் உள்ள உணவைப் பெற வழி செய்தே ஆகவேண்டும்.


இங்கே ஆராய்ச்சியும், விரிவாக்கமும் இணைந்து செயற்படுதல் நன்று. உணவு உற்பத்தி என்ற இலக்கினூடாக உணவு சுகாதாரத்தையும் கவனத்திற்கு எடுத்தல் வேண்டும். எந்தவொரு நோய்க்கும் உணவு அளவாக சமநிலையாக இருக்கவேண்டும். உணவு சரியாக இல்லையென்றால் நோய் மாறாது. உடல் எதிர்ப்பு சக்தியை இழந்துவிடும். உடலைப் பேணிப் பாதுகாக்க உணவு சரியாக உள்ளெடுக்கப்பட வேண்டும்.

திட்டமிட்ட விவசாய செய்கையினூடாக் பசுமைப்புரட்சியின் குறிக்கோள்களை அடையலாம். யாழ்.குடாநாட்டில் உள்ள விவசாய விரிவாக்கத்தினதும், கமநல சேவை நிலையத்தினதும் முன் மாதிரியான பங்களிப்பு பாராட்டத்தக்கது. இன்னும் வேண்டும் உண்ணுபவர் பழக்கத்தை மாற்ற பண்டம் தயாரிப்பவர் வழக்கத்தை மாற்றுவர். இதன் மூலமாக விவசாயிக்கு உற்பத்தி செய்வதற்கான உந்துதல் கிடைக்கும். இவ்வளவும் கூறினேன். இப்பொழுது எத்தனை பேர் தமது உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளப் போகிறீர்கள்? ஆரம்பம் நீங்களாக இருக்கலாம் அல்லவா! (தொடரும்)

**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

# கொல்லைப்புற கோழி வளர்ப்பு முறைகள்

**ஒளிவசதி**


பிளாஸ்ரிக்கினாலான உணவுத் தொட்டி

கோழி வீடுகளின் உள்ளே தாராளமாக சூரிய வெளிச்சம் பரவி நிற்கக் கூடியதாக இருக்கவேண்டும். பொதுவாக முட்டைக் கோழிகளுக்கு 16 மணித்தியாலங்கள் வெளிச்சம் வழங்கும்போது முட்டையிடும் வீதம் அதிகரிக்கின்றது. நமது பிரதேசத்தை பொறுத்தவரை அதிகாலை இரண்டு மணித்தியாலமும் மாலை வேளையில் மேலதிகமாக இரண்டு மணித்தியாலமும் செயற்கையான முறையில் ஒளியூட்டப்படலாம். இதற்காக புளோரசன்ஸ் மின்சார விளக்குகளைப் பயன்படுத்தலாம்.

பொதுவாக கோழிக்கூட்டின் யன்னல்களை தெற்குப் பகுதியில் வைப்பதன் மூலம் நல் வெளிச்சத்தையும் காற்றோட்டத்தையும் பெறமுடியும்.

**காற்றோட்ட வசதி**

கூட்டினுள் போதுமான காற்றோட்டம் இருப்பது மிகவும் அவசியமாகும். இது கோழிகளுக்கு தேவையான ஒட்சிசனை வழங்குவதுடன் மேலதிக ஈரத்தன்மை, அமோனியா மற்றும் காபனீரொட்சைட்டை கூட்டினுள் இருந்து அகற்றுகின்றது. ஈரலிப் புத்தன்மை மற்றும் அமோனியா வாயு என்பன கோழிகளின் ஆரோக்கியத்திற்கு கேடுவிளைவிக்கின்றன. அத்தோடு அதிகமான காற்று கோழிகளின் முட்டையிடும் ஆற்றலை பாதிக்கச் செய்கின்றது.

**கோழி இனத் தேர்வு**

முதலில் என்ன நோக்கத்திற்காக கோழி வளர்க்க உள்ளோம் என்பதை கருத்திற் கொண்டு அதற்குத் தகுந்த மாதிரி இனத்தை தெரிவுசெய்யலாம். முட்டை உற்பத்தியை நோக்காகக் கொள்வோமானால் அவ்வினம் அதிகளவு முட்டை இடக் கூடியதாக இருக்குமாறு தெரிவுசெய்யலாம். தவிர அதன் பருமன் அல்லது அளவைக் கருத்திற் கொள்ளத் தேவையில்லை. இறைச்சிக்காக கோழி வளர்க்கப்படுகின்றது எனின் அதன் முட்டையிடும் தன்மையைக் கருத்திற் கொள்ளத் தேவையில்லை. அவற்றின் வளர்ச்சி மற்றும் முதிர் வயது பருமன் என்பவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

தற்போது யாழ்ப்பாணத்தில் அச்சுவேலி கோழிப் பண்ணையில் கொல்லைப் புற கோழிவளர்ப்புக்கு உகந்த இனங்கள் உருவாக்கப்பட்டு கால்நடை வளர்ப்போர் சங்கங்களின் ஊடாக ஒருநாள் குஞ்சுகளாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

**உணவும் நீரும்**

கோழிகளுக்கு அளிக்கப்படும் உணவு தான் கோழி வளர்ப்பின் பிரதான அம்சமாகும். வீட்டளவில் ஒரு கோழி வளர்த்தாலும் அல்லது பத்துக் கோழிகளை வளர்த்தாலும் அன்றி ஒரு பண்ணை என்ற கண்ணோட்டத்தில் நூறு கோழிகளை வளர்த்தாலும் எந்த அளவு கவனத்துடன் திட்டமிட்ட நடைமுறையுடன் கோழிக்கு உணவு அளிக்கப்படுகின்றதோ அந்த அளவிற்குத்தான் நமக்கு பயன் கிடைக்கின்றது. முட்டை உற்பத்தி பெருக வேண்டும் மற்றும் இறைச்சி வளமானதாகவும் அதிக அளவில் இருக்கவேண்டும் என்பதே எல்லோரினதம் விருப்பமாகும். இதற்கு நாம் கோழிகளுக்கு அவற்றின் தேவைக்கேற்ப சத்து நிறைந்த உணவுகளை திட்மிட்டு வழங்க வேண்டும்.

அத்தோடு கோழி வளர்ப்பில் அதிக அளவு பணமானது அதன் உணவுத் தேவையை நிவர்த்தி செய்யவே செலவாகின்றது. எனவே உணவுத் தெரிவும் அவற்றின் வினைத்திறனான கையாள்கையும் மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. உணவின் தரமானது கோழிகளிலிருந்து கிடைக்கும் உற்பத்தியின் அளவு மற்றும் தரத்தை தீர்மானிக்கின்றது. அத்தோடு கோழிகளின் வயது மற்றும் என்ன நோக்கத்திற்காக வளர்க்கின்றோம் என்பதனைப் பொறுத்து உணவுகளின் தன்மையானது வேறுபடுகின்றது. உணவில் பின்வரும் சத்துக்கள் சரியான விகிதத்தில் காணப்பட வேண்டும்.

காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு, விற்றமின்கள், கனியுப்புக்கள், நீர்

***1. காபோவைதரேற்று***

சாதாரணமாக உயிரினங்களின் உடலுக்கு தேவையான சக்தியை காபோவைதரேற்றும் கொழுப்பும் அளிக்கின்றது. உடல் உஷ்ணம் ஒரே சீரான நிலையில் இருக்க உதவுவதுடன் உடலில் அன்றாட செயற்பாடுகள் சீராக நடைபெறவும், கோழிகளின் நடமாட்டத்திற்கும், புது திசுக்கள் உருவாகுவதற்கும் மற்றும் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கும் சக்தி பயன்படுத்தப்படுகின்றது.

காபோவைதரேற்றுக்கள், தானிய வகைகள் மற்றும் தானிய கழிவுப் பொருட்களில் அதிகளவில் காணப்படுகின்றது. பொதுவாக ஒரு கிராம் காபோவைதரேற்றிலிருந்து 4.2 kcal சக்தி கிடைக்கின்றது.

***2. புரதம்***

புரதமானது கோழிகளின் வளர்ச்சிக்கும், ஆற்றலுக்கும் மிகவும் அவசியமாகும். அத்தோடு கோழிகளின் உடலில் தேய்ந்த கலங்களைப் புதுப்பிக்கவும், முட்டை உற்பத்தி பெருக்கத்திற்கும் புரதச்சத்து இன்றியமையாததாகத் திகழ்கின்றது. புரதங்களில் காணப்படும் அமினோ அமிலங்கள் பெரும்பாலும் கோழிகளின் உடலில் இயல்பாக உருவாவதில்லை. அத்தோடு உருவாகும் அமினோ அமிலங்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

ஆகவே கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனத்தில் அமினோ அமிலங்கள் தாரளமாக இடம்பெறுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

கோழியிடமிருந்து கிடைக்கும் முட்டை, இறைச்சி என்பன யாவுமே புரதம் செறிந்த உணவுப் பொருட்களாகும். பொதுவாக கோழி இறைச்சியில் அண்ணளவாக 21% புரதமும் கோழிமுட்டையில் 13% புரதமும் காணப்படுகின்றது.


ஆகவே கோழிகளுக்கு தீவனத்தை வரையறுத்து நிர்ணயிக்கும்போது, அதில் 15-20% புரதம் இருப்பதை உறுதிசெய்வதோடு, தீவனத்தில் புரத அமினோ அமிலங்கள் சாதாரணமாகக் கிடைக்கக் கூடியவாறு வழியமைத்தால் கோழிக்குஞ்சுகள் நல்ல வளத்துடன் துரிதமான வளர்ச்சியினைப் பெறுவதுடன், கோழியின் முட்டையிடும் திறனுக்கேற்ப அதிகமாக முட்டைகளை கோழிகளிடமிருந்து பெறமுடியும்.

***3. கொழுப்பு***

கொழுப்பானது காபோவைதரேற்றை விட அதிகளவு சக்தியை வழங்குகின்றது. 1கிராம் காபோவைதரேற்றிலிருந்து கிடைக்கும் சக்தியை விட கொழுப்பிலிருந்து இருமடங்கிற்கு அதிகமான சக்தி (9.4 kcal) கிடைக்கின்றது. ஆனால் கோழிகளின் உணவில் கொழுப்புச் சத்து தகுந்த அளவில் இடம்பெற வேண்டியது முக்கியமாகும்.

ஏனெனில் அதிகளவு கொழுப்புச்சத்து நிறைந்த உணவுகளை நீண்ட நாட்கள் சேமிக்கும்பொழுது அவை பாண்டல் (Rancidity) அடைகின்றது. அவற்றை தொடர்ச்சியாக பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது. அத்தோடு அவற்றிற்கான செலவும் அதிகமாகக் காணப்படுகின்றது.

கோழிகளின் உடலில் லினோலிக் கொழுப்பு அமிலத்தை தவிர மற்ற எல்லாக் கொழுப்பமிலங்களும் போதுமான அளவு உற்பத்தியாகின்றன. லினோலிக் கொழுப்பு அமிலமானது கோழிகளின் வளர்ச்சிக்கும், சுவாசப் பை தொடர்பான நோய்கள் வராமல் தடுப்பதற்கும் மற்றும் கோழிகளின் முட்டையின் அளவை சரியாக வைத்திருக் கவும், குஞ்சு பொரிக்கும் அளவை அதிகரிக்கவும் பயன்படுகின்றது. பொதுவாக லினோலிக் கொழுப்பு அமிலமானது சோளத்தில் அதிகளவில் காணப்படுகின்றது. கோழி இறைச்சி மற்றும் முட்டை ஆகியன முறையே 9%, 10% கொழுப்பைக் கொண்டுள்ளன.


பிளாஸ்ரிக்கினாலான தண்ணீர்க் கொள்கலன்

***4. விற்றமின்கள்***

விற்றமின்கள் சேதனப் பதார்த்தங்கள் ஆகும். இவை கொழுப்பில் கரையும் விற்றமின்கள் (A,D,E) மற்றும் நீரில் கரை யும் விற்றமின்கள் (B,C) என 2வகையாகப் பிரிக்கப்படுகின்றது. முட்டையின் கரு நல்ல முறையில் வளர்ச்சியடைவதற்கு விற்றமின் A இன்றியமையாததாகும். விற்றமின் A குறையும் போது கோழிகளின் முட்டையிடும் ஆற்றல் குறைகின்றது. குஞ்சுகள் பொரிக்கும் வீதம் குறைகின்றது. கண்நோய்கள் போன்றன ஏற்படுகின்றன. எலும்புகளின் சீரான வளர்ச்சிக்கு விற்றமின் D உதவுகின்றது.

விற்றமின் E குறையும்போது எலும்புகள் தொடர்பான பிணிகள் உருவாகின்றது. எலும்புகள் அளவுக்கு மீறி மென்மையடைவதனால் காலூன்றி நிற்கமுடியாதவாறு போகின்றது.

**செல்வி சுகந்தி வைரமுத்து**
விலங்கு விஞ்ஞானத்துறை,
தகவல் தொடர்பு மையம்.

அத்தோடு கோழி முட்டையின் ஓடு மிகவும் மெல்லியதாகின்றது. விற்றமின் B ஆனது கோழிக்குஞ்சுகளின் வளர்ச்சி மற்றும் முட்டையிடும் திறனைப் பாதிக் கின்றது.

பொதுவாக விற்றமின்கள் பச்சைத் தாவரங்கள், தானியங்கள் மற்றும் மீன் உணவுகளில் காணப்படுகின்றன. (தொடரும்)

# ஸ்வானின் சுழலில் இந்திய அணி திணறல்; இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 316



(சென்னை)

அறிமுக வீரர் ஸ்வானின் துல்லியமான சுழலில் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் பணிய இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 155 ஓட்டங்களை எடுத்து தடுமாறி வருகின்றது.

முன்னதாக இங்கிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 316 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்ட நேரமுடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 229 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, ஆட்டம் ஆரம்பமாகி ஓட்டமெதனையும் எடுக்காத நிலையில் பிளின்டெப் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 6 ஆவது விக்கெட்டையுமிழந்தது.

எனினும் 7ஆவது விக்கெட்டுக்காக அன்டர்சனுடன் இணைந்த பிறிர் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தார்.

இந்த ஜோடி 7 ஆவது விக்கெட்டுக்காக 42ஓட்டங்களை எடுத்தபோது நிதானமாக ஆடிய அன்டர்சன் எடுத்த போது 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஸ்வான் 1, ஹார்மிசன் 6 மற்றும் பனீசர் 6 ஓட்டங்களை எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழக்க முதலாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 316 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

ஒரு முனையில் நிலைத்து நின்று சிறப்பாக ஆடிய பிறிர் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களை எடுத்து அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். முன்னதாக ஸ்ரொரஸ் 123 ஓட்டங்களையும் குக் 52 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் ஹர்பஜன்சிங், மிர்ஷா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் சகீர்கான் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் இஷாந்த் சர்மா, யுவராஜ் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சிதான்.

அந்த அணியின்ஆரம்ப அதிரடி துடுப்பாட்ட வீரர் சேவாக் 9 ஓட்டங்களுடன் அன்டர்சனின் பந்துவீச்சிலும்,

காம்பீர் 19, டிராவிட் 3 ஓட்டங்களுடன் அறிமுக வீரர் ஸ்வானின் பந்துவீச்சிலும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 37 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த டெண்டுல்கர், லக்ஸ்மன் ஜோடி சிறப்பாக துடுப்பெடுத்தாடி சரிவிலிருந்து அணியை மீட்டனர்.

எனினும் இந்த ஜோடி 61 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது லக்ஸ்மன் 24 ஓட்டங்களுடன்ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து யுவராஜ்சிங் களமிறங்க மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டெண்டுல்கர் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 102 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

இந்நிலையில்யுவராஜ்சிங்குடன் இணைந்த அணித்தலைவர் தோனி பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி ஓரளவு நம்பிக்கையளித்தார்.

எனினும் யுவராஜ்சிங் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சொதப்பினார்.

தொடர்ந்து அணித்தலைவர் தோனியுடன் இணைந்த ஹர்பஜன் சிங் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை எடுக்க இந்திய அணி நேற்றைய இரண்டாம்நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 155 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் அணித்தலைவர் தோனி 24, ஹர்பஜன் சிங் 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் அறிமுக வீரர் ஸ்வான் 2 விக்கெட்டுக்களையும் ஹார்மிசன், அன்டர்ஷன், பிளின்டொப் மற்றும் பனீசர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 161 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் உள்ள நிலையில் மூன்றாம்நாள் ஆட்டம் இன்றாகும்.


## துளிகள்

- ரசிகர்களின் கூட்டம் நேற்று குறைவாக இருந்தது. இந்திய அணி துடுப் பாட்டம் செய்யும் போது கூட்டம் ஓரளவு அதிகரித்தது.
- அன்டர்சன் 6 ஓட்டங்களில் இருந்த போது டிராவிட் பிடியை தவற விட்டார். இதைத் தொடர்ந்து அவர் சிலிப் பகுதியில் இருந்து கவர் பகுதிக்கு மாற்றப்பட்டார். சிறிது நேரத்தில் திரும்பவும் அதே சிலிப் பகுதியில் நிறுத்தப் பட்டார்.
- 2ஆவது புதிய பந்தை அணித் தலைவர் தோனி எடுக்கவில்லை. இது ஆச்சிரியமானதாகும்.
- அதிரடி துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங்குக்கு நேற்று 27 ஆவது பிறந்த நாள். சேப்பாக்கம் மைதானத்தில் அவர் கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடினார். அவருக்கு இந்திய வீரர்கள் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தனர். (5)

# இரண்டாம் நாள் ஆட்டம் மழை காரணமாக ரத்து

(டியூனேடின்)

நியூசிலாந்து மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட்போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் கடும் மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் ரத்துசெய்யப்பட்டது.




நியூசிலாந்து ஓவல் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த போட்டியின் முதல் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடை பெற்றது.

எனினும் நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழை காரணமாக மைதானத்தில் மழை நீர் வெள்ளம் தேங்கியது. மேலும் நேற்று தொடர்ந்து மழை பெய்துகொண்டிருந்ததால் 2ஆவது நாள் ஆட்டம் ரத்து செய்யப்பட்டதாக போட்டி நடுவர்கள் அறிவித்தனர்.

இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடி வரும் நியூசிலாந்து அணி முதல் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இனிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்கள் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# அவுஸ்திரேலிய ஓபனில் டேவன்போர்ட் ஆடுகிறார்

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்பதை அமெரிக்காவின் லின்சே டேவன் போர்ட் உறுதி செய்துள்ளார்.

இதன் மூலம் மகளிர் சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் அவர் தொடர்ந்து விளையாடுவார் என்று தெரிகிறது. முன்னாள் உலகின் முதல் நிலை வீராங்கனையும். கடந்த 2000 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலிய ஓபன் பட்டம் வென்ற வருமான லின்சே டேவன்போர்ட் கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற யு.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டிகளுக்கு பின்னர் சர்வதேச போட்டி களில் இருந்து விலகி இருந்தார்.

இதனால் அவர் டென்னிஸில் இருந்து ஓய்வுபெறுவார் என்று கூறப்பட்டது. இந் நிலை யில் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி களில் பங்கேற்க டேவன்போர்ட் முன்வந்துள் ளார். இது தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப் பதாக போட்டி இயக்குநர் கிரெய்க் கூறியுள் ளார்.

தற்போது உலக டென்னிஸ் தரவரிசையில் டேவன்போர்ட் 35ஆவது இடத்தில் உள் ளார். (5)

# ஐ.பி.எல். இருபது -20 தொடர்; பெங்களூர் அணியில் பீற்றர்சன்?

(லண்டன்)

ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடும் வீரர் களுக்கு கோடிக்கணக்கில் பணம் கிடைக்கிறது. இதனால் ஐ.பி.எல். போட்டியில் விளையாட ஒவ்வொரு நாட்டு வீரர்களும் மிகுந்த ஆர்வத் துடன் உள்ளனர்.

இங்கிலாந்து வீரர்கள் மட்டும் ஐ.பி.எல். தொடரில் ஆடவில்லை. அடுத்த ஆண்டு நடைபெறும் 2 வது ஐ.பி.எல்.போட்டியில் விளையாட அவர்கள் விரும்புகின்றனர். இதன்காரணமாகவே அந்த அணி வீரர்கள் மீண்டும் இந்தியா வந்து டெஸ்டில் விளையாடி வருகின்றனர்.

இங்கிலாந்து அணியின் அதிரடி ஆட்டக்காரர்களாக அணித்தலைவர் பீற்றர்சன், பிளின்டொப் உள்ளனர். இருவரும் அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். போட்டியில் விளையாட ஒப்பந்தமாகிறார்கள்.

இதில் பீற்றர்சனை தங்களது அணியில் இழுக்க பெங்களூர்றோயல்சலஞ்சர்ஸ் உரிமையாளர் விஜய் மல்லையா மிகுந்த ஆர்வமாக உள்ளார். பீற்றர்சனுக்காக எந்த விலையும் கொடுக்க தயார் என்று அவர் தெரிவித்துள் ளார்.

வீரர்கள் ஏலம் பெப்ரவரி மாதம் நடக் கிறது. கடந்த ஐ.பி.எல்.போட்டியில் ராகுல் டிராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை. இதன் காரணமாக அவர் டிரா



விட்டை சாடி இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

ஐ..பி.எல். போட்டிக்காகவே இலங்கை அணி இங்கிலாந்து பயணத்தை ரத்துசெய்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## வன்னியில் பொறிவெடி...

நடைமுறையில் இருந்த போது நான் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி யாக இருந்தேன். போர்நிறுத்த காலகட்டத்தில் படையினருக் கான பயிற்சிகளை நான் அதிகரித்திருந் தேன். போரை நாம் எதிர்பார்த்தோம்.

இராணுவத்தளபதியாக நான் பதவி ஏற் றதும் துருப்புக்களுடன் தயாராக இருந்தேன். இராணுவத்தின் சிறப்பு அணிகள் பலவற்றை விடுதலைப் புலிகளின் பகுதிகளில் நடவடிக் கையில் ஈடுபடுத்தியிருந்தேன். எனது சிந்த னைகள் மரபு வழியிலானது அல்ல. அது வேறுபட்டதாகவே இருந்தது. இளநிலை அதி காரிகளை களமுனைக் கட்டளை அதிகாரி களாக நியமித்தேன்.

உதாரணமாக ஐந்தாவது நிலையில் உள்ள மூத்த அதிகாரியையே யாழ். குடாநாட் டின் கட்டளை அதிகாரியாக நியமிப்பது வழக் கம். ஆனால் மூத்த அதிகாரிகளின் நிலை யில் 15ஆவது இடத்தில் இருந்தவர் யாழ். குடாநாட்டு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இதனால் பல குழப்பங்கள் ஏற்பட்டன. ஆனால் அதன் பலாபலன்கள் அதிகம். அதனைப் போலவே 58ஆவது படையணியின் கட்ட ளை அதிகாரி பிரிகேடியர் சவீந்தர் சில்வா மூப்பு அடிப்படையில் 45ஆவது இடத்தில் இருப்பவர். அவர் தற்போது பூநகரியை கைபற்றியுள்ளார்.

இதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆதரவும் எனக்கு இருந்தது. நாம் இருவரும் இணைந்து தேவையான ஆயுதங்களையும் வெடிபொருட் களையும் கொள்வனவு செய்ததுடன் பயிற்சி மற்றும் உத்திகளையும் வடிவமைத்திருந் தோம்.

பதவிக்கு நாம் வந்த போது 40 ஆயிரம் சிப்பாய்களுக்கு தலைக் கவசம் கிடையாது. பலரிடம் ஒரு தொகுதி சீருடைகளும் ஒரு கோடி சப்பாத்துகளுமே இருந்தன. 40 ஆயி ரம் பேருக்கான அங்கிகளுக்கும் தட்டுப்பாடு காணப்பட்டது. எல்லாவற்றையும் நாம் சீர் செய்தோம்.

பின்னர் மேற்கொண்ட படைச் சேர்ப்புக் களால் அவர்களின் பலம் 15 ஆயிரமாக உயர்ந்து. ஆனால் அவர்களில் 12 ஆயிரம் பேர் தற்போது கொல்லப்பட்டு விட்டனர். என வே அவர்களில் தற்போது 2ஆயிரத்து500 பேரே எஞ்சியுள்ளனர். அவர்களுக்கு ஆட்பற் றாக் குறை உள்ளது.

எனினும் விடுதலைப் புலிகள் வசம் அனு பவமுள்ள படையணிகள் உள்ளன. எனவே தான் படைத்தரப்பு அதிகம் இழப்புக்களை சந்தித்து வருகின்றது. மிதி வெடிகளில் சிக்சி 500 படையினர் கால்களை இழந்துள்ளனர்.

வன்னியில் ஒவ்வொரு அங்குல நிலமும் பொறி வெடிகளால் சூழப்பட்டுள்ளது. எனவே அது இலகுவான நடவடிக்கை அல்ல என் றார்.

(ச-5)

# மரண அறிவித்தல்கள்

## மருதர் கதிர்காமு



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், இராஜகாரியர் வீதி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மருதர் கதிர்காமு 12.12.2008 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணமணியின் அன் புக் கணவரும் சின்னக்குட்டி மருதர் ஆகியோரது மகனும், ஜெயச்சந்திரன், இந்திராதேவி, சகுந் தலாதேவி, காலம்சென்ற தெய்வேந்திரராசா, இரட்ணஜோதி, இரட்ணரதி (ஜெர்மனி), இரட் ணேஸ்வரன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி), சந்திரவதனி (ஆசிரியை யா/பண்டத்தரிப்பு கலைமகள் வித்தியாலயம்) ஆகி யோரின் பாசமிகு தந்தையாரும், தங்கமலர், கணேஷ், யோகராசா, புஸ்பராணி, ஆன்மேகலதா, றினாசா (ஜெர்மனி), சுகந்தி (ஆசிரியை யா/கனகரத்தினம் ம.வி), நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

கௌரி, றஜி, றெசோ, ஜெகன், ஜெனா, ஜெசி, கண்ணன், ஜெறோ, மீனா, அபி, துவாரகா, கீர்த்திகா, பிரசன்னா, ராஜேஸ்கண்ணா, பிரசாந்தி, அபிசாதன், சாகித்யன், ஸ்ருதிகா, கிரிஷானந், ஷகானா, ஜெர்மனியைச் சேர்ந்த சுகன்யா, லாவண்யா, நிலானி, கவிதா ஆகியோரின் அன்புப் பேரனாரும், றஸ்மியா, டினோஜா, சாருஷன், கம்சன், விதுர்ஷன், நிந்துஜன், நிந்துஜா, கேதுஜன் ஆகியோரின் அன்புப் பீட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12.12.2008 அன்று மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் ; எம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் கள், நண்பர்கள ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு,
அட்டகிரி,
தொ.பே: 0777034745

தகவல்:
க.இரட்ணேஸ்வரன்
(மகன்)

(1950)

## சின்னையா சிவஞானசுந்தரம்

(முன்னாள் பிரதம கணக்காளர், புகையிரதத் திணைக்களம், பிரதம கணக்காய்வாளர் ஜம்பியா, ஆலோசகர் நிதிஅமைச்சு இலங்கை)

கொக்குவிலை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிட மாகவும் கொண்ட அமரர் சின்னையா சிவஞானசுந்தரம் அவர்கள் 12.12.2008 (நேற்று) அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் அமரர்களான திரு.திருமதி சின்னையா சிவஞானம் தம்பதிகளின் அன்பு மகனும், சித்தன்கேணியைச் சேர்ந்த அமரர்களான க.சபாரத்தினம் (ரக் குவான் ஓவசியர்) நீதிநாயகம் தம்பதியினரின் மருமகனும், திருமதி சிவனேஸ் வரியின் அன்புக் கணவரும், சிவகௌரி, சிவசாந்தி ஆகியோரின் பாசமிகு தந் தையும் சிவபாதசுந்தரம் (கனடா), விஜயசுந்தரம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), திருமதி நாகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகி யோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.12.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் 13/5, டயா வீதி, வெள்ளவத்தையில் நடைபெறும் என்பதை உற்றார் உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

வட்டு. கிழக்கு
சித்தன்கேணி.

தகவல்:
வைத்தியகலாநிதி
சி.சதாசிவம் (மைத்துனர்),
ச.ஐங்கரன் (பெறாமகன்).

(C-1846)

## முகர்ஜியின்...

ஊடகங்கள் மட்டுமே செய்தி வெளியிட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்திய மத்திய அரசு இதுவரையில் எவ்வித உத்தியோக பூர்வ அறிவித்தல்களையும் வெளியிடவில் லை எனக் குறிப்பிடப்படுகிறது. இதேவேளை ஆயுதங்கள் களையப்படும் வரையில் யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்படமாட்டாது என்ற இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றமில்லையெனஅரசாங்கத்தின் சிரே ஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச)

## சிவாஜிலிங்...

அரசாங்கத்தின் இந்த உத்தரவை அடுத்து புதுடில்லி ஜவகர்லால் பல்கலைக் கழக விடுதியில் தங்கியிருந்த சிவாஜிலிங்கம் உடனடியாக சென்னைக்கு திரும்பியுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வை கோபாலசாமியின் தலைமையில் சென்னை யில் இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயத் தின் முன்னால் மறுமலர்ச்சி திராவிட முன் னேற்றக் கழகத்தின் ஆர்ப்பாட்டத்தின் போது சிவாஜிலிங்கம் அதில் பங்கேற்றிருந்தார்.

இந்நிலையில் இந்திய அரசாங்கத்தின் உத்தரவை அடுத்து சிவாஜிலிங்கம் இந்திய மண்ணில் இருந்து வெளியேறினால் அதன் மூலம் இந்திய மத்திய அரசாங்கமும் தமிழக அரசாங்கமும் அரசியல் பிரச்சினைகளை சந்திக்கலாம் என ரான்ஸ்கரண்ட் செய்தி சேவை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு நாடாளு மன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் திரும்பி னால் கொல்லப்படலாம் என மறுமலர்ச்சி திரா விடமுன்னேற்றக்கழக செயலர் வை கோபால சாமி அச்சம் வெளியிட்டுள்ளார்.

இதனை அடுத்து சிவாஜிலிங்கம் சென் னையில் அரசியல் அடைக்கலம் கோரலாம் என தமிழக அரசியல் தரப்புக்கள் கருதுவ தாக ட்ரான்ஸ்கரண்ட் செய்திச் சேவை எதிர்வு வெளியிட்டுள்ளது.

எனினும் இது குறித்து தனக்கு மத்திய அரசே அல்லது மாநில அரசோ எவரிடம் இருந்தும் இது வரை தனக்கு உத்தியோகபூர் வமாக அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை எனவும் இது திட்டமிட்டு பரப்பப்படும் செய்தி யாக இருக்கலாம் எனவும் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளதாக பிந்திய தகவல்கள் தெரி விக்கின்றன. (ச-5)

## ஈழத்தமிழர் பேரவலம் குறித்த முறைப்பாடு கையளிப்பு

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரி டம் ஈழத்தமிழரின் பேரவலம் குறித்த விண் ணப்பம் கையளிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் 60-வது மனித உரிமைகள் நாளான புதன்கிழமை இலங்கைத் தமிழரின் பேரவலம் குறித்த விண்ணப்பம் டென்மார்க் தமிழ் மக்களின் சார்பில் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளிக்கப்பட்டது.

டென்மார்க்கின் சமூக லிபரல் கட்சியின் பிரமுகர் த.தர்மகுலசிங்கம் மற்றும் டென்மார்க் கின் லுங்பி பங்குத்தந்தை அல்றின் சூசைப் பிள்ளை ஆகியோர் ஐரோப்பிய நாடாளு மன்ற உறுப்பினர் கிறகம் வற்சனை புரூசல் நகரில் அமைந்துள்ள ஐரோப்பிய நாடாளு மன்ற வளாகத்தில் சந்தித்து இந்த விண்ணப் பத்தை கையளித்தனர்.

கிறகம் வற்சன் பிரித்தானியாவின் மேற்கு லண்டன் லிபரல் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரித்தானியா வின் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரும் ஐரோப்பிய லிபரல் ஜனநாயகக் கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர்களின் குழுத் தலை வரும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## 2 நாட்கள்...

இராணுவத்தினரின் இப்பாரிய படை நகர்வை வெற்றிகரமாக முறியடித்த தமிழீழ விடுத லைப் புலிகள் புதன்கிழமை இரவு இராணு வத்தினரை மலையாளபுரம் வரை பின் நகர்த் தியுள்ளனர்.

இம்முறியடிப்புத் தாக்குதலில் 120 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 280க்கும் மேற்பட்ட படையினர் காயமடைந் துள்ளனர் எனவும் விடுதலைப் புலிகள் தெரி வித்துள்ளனர். இறந்தவர்களில் சிலர் புதிதாக படைக்கு சேர்க்கப்பட்ட இளைஞர்களும் அடங் குகின்றனர் என மேலும் தெரிவித்துள்ளனர்.

எனினும் இம்மோதல்களில் படைத்தரப்பில் 23 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 27 புலிகள் கொல்லப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருந்தார். இதன்போது கொல்லப் பட்ட சுமார் 25க்கும் மேற்பட்ட சடலங்கள் யுத்த சூனியப் பிரதேசங்களில் சிதறிக் கிடப் பதாக படைத்தரப்பினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தெரிவித்துள்ளனர். (ச-5)

## இலங்கைக்கான இராணுவ...

இதன் மூலம் இராணுவப் பயிற்சி, நிதியு தவி, இராணுவத் தளபாட விநியோகம் உள் ளிட்ட இராணுவ உதவிகள் வரையறுக்கப் படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர் போராளிகளை யுத்தத்தில் ஈடு படுத்தும் நாடுகளுக்கு எதிராக இந்தச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட உள்ளது.

இதன்படி ஆப்கானிஸ்தான், சாட், கொங் கோ, சூடான், உகண்டா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கான இராணுவ உதவிக ளை அமெரிக்கா மட்டுப்படுத்தக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க படையில் சிறுவர் போராளிக ளை இணைத்தல் அல்லது அரச ஆதரவு துணை இராணுவக் குழுக்களில் சிறுவர் போராளிகளை இணைத்தல் ஆகியன பாரிய குற்றச் செயல்களாக அமெரிக்கா அறி வித்துள்ளது.

அமெரிக்க ஆயுதங்கள் சிறுவர்களின் கைகளில் சேர்வதனை ஏற்றுக் கொள்ள முடியாதென அமெரிக்க உயர் அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இயங்கும் துணை இரா ணுவக் குழுக்களில் சிறுவர் போராளிகள் இணைக்கப்படுவதாக 2008ஆம் ஆண்டு மார்ச்சில் வெளியான அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இலங்கைக்கான இரா ணுவ உதவிகள் குறைக்கப்படக் கூடிய அபா யம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகி றது.

(ச-5)

Hatton National Bank
A quoted public company incorporated in Sri Lanka in March 1970, with limited liability

அடகுப் பொருட்களை ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லிவீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.10.2007இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத , காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 20.12.2008 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

❖ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒருபகுதியையும் (ரூபா. 500) செலுத்தி

அல்லது

❖ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப்பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ள லாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

– ஹற்றன் நஷனல் வங்கி

(C-1842)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.